விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a-News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 03 திங்கட்கிழமை (17.03.2003) தொலைபேசி- 2223378 ஒலி 88

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது


ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

## அரசு-புலிகள் முக்கிய சந்திப்பு 18ம் திகதி

# அதிகாரப் பரவலாக்கல் குறித்து 6-ம் சுற்றுப் பேச்சில் ஆராய்வு !



## யப்பான் புறப்பட முன் அமைச்சர் பீரிஸ் தகவல்

(நமது நிருபர்)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நாளை யப்பானில் நடைபெறவுள்ள 6-ம் சுற்று சமாதான பேச்சு வார்த்தையின்போது மனித உரிமை விடயங்கள் அதிகாரப் பரவலாக்கல் மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்தும், திருகோணமலைக் கடலில் இடம் பெற்ற கப்பல் தாக்குதல் சம்பவம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படும் என்று அரசின் சார்பில் சமாதான பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கிச் செல்லும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் யப்பான் புறப்படுவதற்கு முன் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.**

யப்பான் தலைநகர் ரோக்கியோவில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள 6-வது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு யப்பான் புறப்படுவதற்கு முன்னதாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று அதிகாலை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே மேறகண்டவாறு தெரிவித்துள்ளார்.இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜூன் மாதம் யப்பானில் நடை பெறவுள்ளது.இக் கூட்டத்திற்கான அடித்தளம் ஒன்று 6-ம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது இடப்படவுள்ளது.

முல்லைத் தீவுக் கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் கப்பல் மீது கடற் படையினர் மேற் கொண்ட தாக்குதல சம்பவம் இப் பேச்சுவார்த்தையின் போது விரிவாக விவாதிக்கப் படும்.

(10ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
இன்று உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல்
கட்டுரையுடன்
விலை:ரு 12/-

## யுத்த நிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் செய்வது அவசியம்

### நோர்வேத் தூதரகம் தகவல்

(கொழும்பு)

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் அம் மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நோர்வேத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல தாக்கிஅழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே எழுந்துள்ள முறுகல் நிலையைத் தவிர்ப்பதற்கு இம் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகவும் கொண்டு வரப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பாக இரு தரப்பினருடனும் தற்போது பேச்சுக்கள் நடை பெற்று வருவதாகவும் நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## பிறமொழிக் கலப்பால் தமிழின் தனித்துவம் சீரழிகிறது

### இளங்குமரன் கவலை

(கிளிநொச்சி)

பிறமொழிகளின் கலப்பால் தமிழ் மொழியின் தனித் தன்மை சீரழிந்து போயுள்ளதாக தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் கவலை வெளியிட்டுள்ளார்.

தமிழீழக் கல்விப் பேரவையினால் நேற்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கவலை வெளியிட்டுள்ளார்.

இப் பரிசளிப்பு விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

பாடப் புத்தகங்களிலும், கற்பித்தலிலும் பெரும்பாலும் பிற மொழிச் சொற்கள் தாராளமாக புகுத்தப்படுகிறது.தமிழ் மொழியில் கலந்துள்ள பிற மொழிச் சொற்களை இனம் காணும் அறிவு ஆசிரியர்களுக்குப் போதாமல் உள்ளது.

தமிழ் மொழியில் பட்டம்.

# நிறைவேற்று அதிகாரத்தின் முன் ஐ.தே.மு. அரசு பலமிழந்துள்ளது!

### கலாநிதி பாலசிங்கம் பேட்டி

(நமது நிருபர்)

ஐ.தே.முன்னணி அரசாங்கமும் அதனுடைய சமாதானத்திட்டமும் தமிழ மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்த போதும் இந்த அரசாங்கம் அடிப்படையில் பலவீனமாக உள்ளதால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் அரசாங்கம் கலைக்கப்பட்டு விட்டால் பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் கிட்டாது போய் விடும் இவ்வாறு விடுதலைப புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சண்டே லீடர் ஆங்கிலவார இதழுக்கு தெரிவித்துள்ளார்.

சண்டே லீடர் வார இதழுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு அதே அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வருமாக இருந்தால் நிரந்தரத்தீர்வுக்கான வாய்ப்பு ஏற்பட முடியும அத்தகைய தொரு சூழ்நிலை ஏற்படும் வரை நாம் சவால்களை எதிர்கொள்ளவேண்டி வரும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைய்யை உடைக்கும் வகையிலும் புலிகளுககு ஆத்திரமூட்டும் வகையிலும் நிபந்தனைகளையும் சூழ்நிலைகளையும உருவாக்குவதில் ஜனாதிபதிக்குப் பங்கு உண்டு என்பதை நியாயமான முறையில் நம்புகிறோம்.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதிநிதிகள் யப்பான் புறப்பட்டனர்

(நமது நிருபர்)

யப்பான் தலைநகர் டோக்கியோவில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையில் நேற்றிரவு 9 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து யப்பானுக்குப் புறப்பட்டு சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் செல்லும் இப் பிரதிநிதிகள் குழுவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்,மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா, பொருளாதார நிபுணர்

(10ம் பக்கம் பார்க்க)

### கப்பல் தாக்கப்பட்ட சம்பவம்

## விசாரணை அறிக்கை இருதரப்பிடமும் கையளிப்பு

(கொழும்பு)

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நேற்றுப் பிற்பகல் கையளித்துள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் அரசுக்கான விசாரணை அறிக்கையை அரசின் சமாதான் செயலகத்திடமும் விடுதலைப் புலிகளுக்கான அறிக்கையை யப்பான் பேச்சுக்கு தலைமை தாங்கிச் செல்லும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பால்சிங்கத்திடமும் நேரடி யாக கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கைகளின் பிரதிகள் செய்தி ஊடகங்களுக்கு இன்று வழங்கப்படவுள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவி னரால் கையளிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் தாக்கப்பட்டிருப்பதாகவும் இது விடயம் தொடர்பாக கடற்படையினர் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவிற்கு அறிவித்து நடவடிக்கை எடுக்காமை தவறு என்றும் சுட்டிக் காட்டியிருப்புதாகத் தெரியவந்துள்ளது. (வ)

### கூட்டுக் கட்சிகளுடன் பேசுகின்றோம்

## பொ.ஐ.முன்னணியை மீண்டும் ஆட்சியில் அமர்த்த நடவடிக்கை

### கட்சியின் செயலாளர் தெரிவிப்பு

(கண்டி)

பொது.ஜன ஐக்கிய முன்னணியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவருகிறது இதற்கு முன்னோடியாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் கூட்டுக் கட்சிகளுடன் தற்போது பேச்சுவார்த்தைகள் நடை பெற்று வருகின்றன என்று பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் முன்னாள அமைச்சருமான டி.எம்.ஜயரத்தினா நேற்றுக் கண்டியில் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம் பெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய டி.எம்.ஜெயரத்தினா மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் மக்கள் மீது வாழ்க்கைச் சுமை என்றும் இல்லாதவாறு (10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலைமை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




## வெற்றிக்கு வழி தெரிந்து விட்டது அணித்தலைவர் கங்குலி தெரிவிப்பு

இந்த உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தைத் தவிர அனைத்துப் போட்டிகளிலும் சிறப்பாகவே ஆடியுள்ளோம். குறிப்பாக வெற்றிக்கான வழிவகைகளையும் கண்டறிந்துள்ளோம் என நியூசிலாந்



துக்கு எதிரான ஆட்டத்தில் வென்ற பின் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இனிவரும் ஆட்டங்களே மிக முக்கியமானவை. ஓய்வு பெறுவதற்கு கூட நேரமில்லாமல் பயிற்சியில் ஈடுபடுகிறோம் என்றார். இது நாம் செஞ்சூரியனில் ஆடிய 3வது ஆட்டமாகும். எனவே மைதானத்தைப் பற்றி நன்றாக அறிந்து வைத்துள்ளோம். இரண்டாவதாக துடுப்பெடுத்தாடுவது சுலபமாக இருக்கும் என்பதால் நாணயச் சுழற்சியில் வென்றதும் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தேன் என்றார் கங்குலி.

ஒவ்வொரு ஆட்டத்திலும் யாராவது ஒரு துடுப்பாட்ட வீரர் அணியைக் காப்பாற்றி வருகிறார். அவ்வரிசையில் நியூசிலாந்து அணியுடனான ஆட்டத்தில் முகமட் ஹைப் சிறப்பாக ஆடினார். 7வது ஆட்டக்காரராக களம் நுழையும் போது அதிக வாய்ப்பு கிடைக்காததால் அவர் பிரகாசிக்கவில்லை. தற்போது 4ம் இலக்க துடுப்பாட்ட வீரராக களம் நுழைந்து சிறப்பாக ஆடிவருகிறார். அரையிறுதி ஆட்டங்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் 7 துடுப்பாட்ட வீரர்களும் சிறப்பாக ஆடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார் கங்குலி.

இலக்குகளுக்கு வெளியில் இருந்து உள்நோக்கி வருமாறு பந்து வீசுவதற்கு(off brake) கடந்த ஆறு மாதகாலமாக பயிற்சி மேற்கொண்டேன். தற்போது தான் சாத்தியாமாகியுள்ளது. வலது கை துடுப்பாட்ட வீரர்களுக்கு அவ்வாறு பந்து வீசுவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார் சகீர்கான். நியூசிலாந்திற்கு எதிரான போட்டியில் 42 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றி ஆட்டநாயகனாக சகீர்கான் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அனுபவ முதிர்சி வாய்ந்த சிறிநாத், இடதுகைப் பந்துவீச்சாளர்களான சகீர்கான், அஸிஸ் நெக்ரா ஆகியோர் இந்திய அணியின் வெற்றிக்கு உதவுவார்கள் என எதிர்பார்க்கிறேன் என்றார் கங்குலி. (த-55)

# டிராவிட்டின் பிடியை நழுவவிட்டதே இந்தியாவின் வெற்றிக்கு காரணம்

### நியூசிலாந்து அணித்தலைவர் பிளமிங்

டிராவிட் கொடுத்த பிடியை இலக்கு காப்பாளர் மக்கலம் நழுவவிட்டமையை என்னால் சகிக்க முடியவில்லை. இவ்வேளையில் எனக்கு அழுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை என்றார் நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங். கடந்த வெள்ளிக்கிழமை இந்திய அணியிடம் தோல்வியுற்று நியூசிலாந்து அணி அரை இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெறாமல் உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் இருந்து வெளியேறியது. அத் தோல்வியின் பின்னர் செய்தியாளர்களுக்கு செஞ்சூரியனில் வைத்து பேட்டி அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ராகுல் டிராவிட் ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்றிருந்த வேளையில் ஷோண் பொண்ட் வீசிய அற்புதமான பந்துவீச்சில் நியூசிலாந்து இலக்கு காப்பாளர் மக்கலத்திடம் வழங்கிய இலகுவான பிடியை அவர் நழுவவிட்டார். அப்போது இந்திய அணி 22 ஓட்டங்களை மட்டும் பெற்று முக்கிய மூன்று இலக்குகளை இழந்து இக்கட்டான நிலையில் இருந்து துடுப்பாட்டத்தில் சோபிக்காமல் வெறும் 146 ஓட்டங்களைப் பெற்றிருந்தாலும் டிராவிட்டின் பிடியை எடுத்தி



ருந்தால் நிச்சயம் அரையிறுதிக்கு தகுதி பெற்றிருப்போம் என்றார் பிளெமிங்.

இந்தியாவின் இடது கைப் பந்துவீச்சாளர்கள் மிக அற்புதமாக பந்துவீசி வருகின்றனர். சகீர்கான் இலக்குகளைச் சாய்த்தாலும் அஸிஸ் நெக்ரா அற்புதமான பந்து வீச்சாளராக உருவாகி வருகிறார். தற்போது அவுஸ்திரேலியா அணியைப் போல் இந்திய அணியும் பந்து வீச்சுத் திறனைக் கொண்டு விளங்குகிறது. 5வது பந்து வீச்சாளர் தான் இரு அணிகளுக்கும் உள்ள பிரச்சினை என்றார். வெள்ளிக்கிழமை ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றிருந்தாலும் முதலில் துடுப்பாடவே தீர்மானித்திருப்போம். துடுப்பாட்டத்திற்கு தகுந்த ஆடுகளமாக இருநதாலும் அதனை பயன் படுத்திக் கொள்ள தவறி விட்டோம் என்றார்.

டிராவிட் உலகின் முதல்தர துடுப்பாட்ட வீரர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பிடிகளே ஆட்டத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்பவை. டிராவிட்டின் பிடியை நழுவ விட்டமை மாபெரும் துரதிஷ்டம் வெறும் 146 ஓட்டங்களைப் பெற்று விட்டு எதிரணி தரும் வாய்ப்புக்களையும் கோட்டை விட்டால் எவ்வாறு ஆட்டத்தில் வெற்றி பெறுவது என்றார் பிளமிங். (55)

# அவுஸ்திரேலிய அணியை கலங்க வைத்த ஹரீம்

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியின் சுப்பர் சிக்ஸ்க்ஸ் ஆட்டத்தில் கென்யாவை 5 இலக்குகளால் வென்று அவுஸ்திரேலியா வெற்றிப் பயணத்தைத் தொடர்கிறது.

ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி பெற்ற 15வது தொடர் வெற்றியாகும் டார்பனில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பகல் இரவு ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர் பிரெட்லீ தொடர்ந்து 3 இலக்குகளைச் சாய்த்து உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் ''ஹட்றிக்'' சாதனையை நிகழ்த்திய முதல் அவுஸ்திரேலிய வீரர் என்னும் பெருமையை தட்டிச் சென்றார். கென்யா அணி சார்பாக ஸ்ரீவ் ரிக்கோலோ மற்றும் ரவீந்து ஷா ஆகியோர் முறையே 51, 46 என்னும் ஓட்ட எண்ணிக்கைகளை பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய



அவுஸ்திரேலிய அணி 31.2 பந்துப் பரிமாற்ற நிறைவில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவுஸ்திரேலிய அணி சார்பாக கில்கிறிஸ்ட் 67 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நிலையில் 117 ஓட்டங்களைப் பெற்று நிலைதளும்பிய அவுஸ்திரேலிய அணியை சைமன்ஸ் மற்றும் ஹார்பி ஆகியோர் 33, 28 என்னும் ஓட்டங்களைப் பெற்று வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர். கென்ய சுழல் பந்துவீச்சாளரான ஹரீம் இவ் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக அமைந்தார். தான் வீசிய 8.2 பந்துப் பரிமாற்றங்களில் 7 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினார்.அவர் வீசிய பந்துப் பரிமாற்றங்களில் 6 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களும் அமைந்தன. ஆட்டத்தின் நாயகனாகவும் ஹரீம் தெரிவு செய்யப்பட்டார். (55)



ஹட்றிக் பெற்ற மகிழ்வில் பிரெட்லீ



லீயின் பந்து வீச்சில் காய மடைந்த கென்ய வீரர் ஒபுயா

| அணிகள் | போட்டிகள் | வெற்றிகள் | தோல்விகள் | புள்ளிகள் | ஓட்ட சராசரி |
|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 5 | 5 | 0 | 24 | +1.84 |
| இந்தியா | 5 | 4 | 1 | 20 | +0.98 |
| கென்யா | 5 | 3 | 2 | 14 | +0.37 |
| இலங்கை | 5 | 2 | 3 | 11.5 | -0.84 |
| நியூசிலாந்து | 5 | 1 | 4 | 8 | -0.90 |
| சிம்பாப்வே | 5 | 0 | 5 | 3.5 | -1.25 |

CRICKET WORLD CUP 2003

அரையிறுதிப் போட்டி அட்டவணை


| | | | |
|---|---|---|---|
| மார்ச் 18 | அவுஸ்திரேலியா VS இலங்கை | போர்ட் எலிசெபத் | 2.00PM |
| மார்ச் 20 | இந்தியா VS கென்யா | டார்பன் | 7.00PM |

# யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய

# ரதோற்சவ சிறப்பு மலர்

## 17-03-2003





### பஞ்சரதம் வருகுதய்யா

பஞ்சரதம் வருகுதய்யா வைத்தீசர் வீதியிலே
கொஞ்சுமெழில் பெருகிடவே ஆனைமுகன் முன்வருவார்
வாலாம்பிகை தேரினையே பெண்ணடியார் தொட்டிழுப்பர்
வேலவரின் அருகினிலே வள்ளிதெய்வ யானைவர
வைத்தீசர் தேவியுடன் ஆனந்தமாய் வலம்வருவார்
இந்தரதம் செல்லுமிடம் தர்மமது பூத்திருக்கும்
வண்ணை நகர்வீதியிலே எள் விழவும் இடமேயில்லை
எண்ணமுடன் தொட்டிழுப்போம் இடம்பிடிப்போம் முத்தியிலே

**கவிமணி கந்தமுருகேச தாசனார்.**

### ஆசிச் செய்தி

**வண்ணை வைத்தீஸ்வரன் சுவாமி தோத்திரம் சுலோகம்**

சந்த் ரார்த்த சூடம் சசிவர்ண தேகம்
பணாமணேர்ப் பூஷண பூஷதாங்கம்
பாலாம்பிகாயா பதிம் அக்நி நேத்ரம்
நமாமி வைத்யேசமகம் மகேசம்

யாழ். வண்ணை மத்தியில் வீற்றிருக்கும் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் சுவாமி கோவில் பதினெட்டாம் நாள் நடைபெறும் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளி பவனி உலா வரும் ரதோற்சவம் மக்கள் மனதில் கண் கொள்ளாக் காட்சியாக நடைபெறுகின்றது. இந்த ரதோற்சவம் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான சங்கார முகூர்த்தங்களில் ஒன்றானது என்பதைக் குறிக்கும் இந்தத் தினத்தில் சிவன் அடியார்கள் பங்கு கொண்டு பஞ்ச மூர்த்திகளை தரிசித்து இஷ்ட சித்தி களைப் பெறும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நன்நாளில் நாட்டில் நன்மையும் சாந்தியும் சமாதானத்துடனும் வாழ எல்லாம் வல்ல வைத்தீஸ்வர பெருமானை பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

**நன்றி வணக்கம்**

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

**லோகாசமஸ்தா சுகிநோபவந்து**

**இங்ஙனம்**

ஆலய பிரதமகுரு

*சிவபூஜாதுரந்தரர் சிவஸ்ரீ முத்து விஜய காந்தக் குருக்கள்*

### அருள்மிகு வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்

சைவ ஆலயங்களை இடித்தும், சைவ சமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்தைப் பரப்பிவந்த ஒல்லாந்தர் மத்தியில், சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கச் செட்டியார் தனது செல்வாக்கினைப் பாவித்து வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலைக் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதிபெற்று, 1787 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1790 இல் வேலையினைப் பூர்த்தி செய்து வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கான பரிவாரக் கோவில்களையும் அமைத்து, அதே ஆண்டில் (1790) கும்பாபிஷேகம் செய்வித்தார். நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடைபெற்றுவரச் செய்தார். நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்குப் பின் வித்துவசிரோன்மணி பொன்னம்பல பிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப்பையர் சுவாமிகள் செய்துவந்தார்கள். நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன நிறுவுனர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் துறவு பூணும் வரை முத்தமிழ் மணி சி.எஸ்.எஸ். மணிபாகவதர் என்ற பூர்வாஸ்சிரம நாமத்துடன் சமயப்பிரசங்கங்களை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்துவந்தார். சைவத்திற்கும், தமிழுக்கும் நிலைக்களனாக விளங்கியது இவ்வைத்தீஸ்வரன் கோவில் வசந்த மண்டபம் என்றால் மிகையாகாது.

சிவாஸ் நகையகம்
8. கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ தாமோதர விலாஸ்
401, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

TRACTOR SPARES
7, KANNATHIDDY ROAD,
JAFFNA.

லிங்கம் உலோகத்தொழிலகம்
264, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பிரணகா நகைத்தொழிலகம்
68/A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

சண்முகம் சைவ உணவகம்
10, கன்னாதிட்டிவீதி,
யாழ்ப்பாணம்.

## சிறுவிளம்பரம்

### தவறா விடாதீர்கள்

சுபானு வருஷ(2003/2004) பலா பலன்கள்-சனீஸ்வர-வியாழ,ராகு-கேது பெயர்ச்சியினால் உங்கள் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்பதை அறிந்து கொள்ளுங்கள்? மற்றும் தரம் 3/4/5 புலமைப் பரிசில் வழிகாட்டல் பயிற்சிகள் சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் பொது அறிவு, உளச்சார்பு,மொழித்திறன் அடங்கிய தகவல் தடாகம், ஆனந்தி வெளியீடுகள்: ஆசிரியர் திரு V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். (6820)

## சமய நிகழ்ச்சிகள்

### அகத்தியர் தேவாரத் திரட்டு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதலும், பன்னிரு திருமுறைப் பாராயணமும் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 9 மணிக்கு சாவகச்சேரி மீசாலை ஸ்ரீ சித்திர வேலாயுத கலாமன்ற தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஆலய பரிபாலன சபையினரின் புராண படன குழுவினர் பெரிய புராண படனத்தையும் ஆரம்பிக்கவுள்ளனர். (உ-10)

### ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சத்தியசாயி சேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளன. (உ)

### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-36)

* * * * *

(கல்வயல்)

சாவகச்சேரி கற்குழி கந்தசாமி புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.(க-36)

### பொங்கல் உற்சவம்

(செம்பியன்பற்று)

மாமுனை ஸ்ரீநாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (உ-42)

### திருநாள் திருப்பலி

(செம்பியன்பற்று)

புலோலி புனித சூசையப்பர் ஆலய திருநாள் திருப்பலி நாளை செவ்வாய்க்கிழமையும், மறுநாள் புதன்கிழமை திருச்சொரூப பவனியும நடைபெறவுள்ளன.

இவ்வாலய உற்சவம் கடந்த 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (க-42)

### இன்று தேர்

(கல்வயல்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர் உற்சவம் இன்று காலை 9 மணிக்கும், தீர்த்தோற்சவம் நாளை காலையும் நடைபெறவுள்ளது. (க-36)

# பாதுகாப்பு அமைச்சின் கடிதத்துக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் காட்டமாக பதில்

(கிளிநொச்சி)

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எமது வர்த்தகக் கப்பலைத்தாக்கி அழித்த இலங்கைக் கடற்படையினரின் முன்யோசனை அற்ற அத்துமீறிய செயலை நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டுள்ளமைக்கு எமது கடுமையான அதிருப்தியைத் தெரிவிக்க விரும்புகிறோம் என்று விடுதலைப் புலிகளின் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் பாதுகாப்பு அமைசசர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக் கடலில் கப்பல் தாக்கப்பட்ட விடயம் தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் கடும் ஆட்சேபத்தை வெளிப்படுத்தி முன்னர் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு பாதுகாப்பு அமைச்சர் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதில் கப்பல் தாக்கப்பட்ட இடம் குறித்து தெளிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அத்துடன, கடற்படையின் தாக்குதலை நியாயப் படுத்தும் விதமாகவே அவரது கடிதம் அமைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்தே புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீண்டும் ஓர் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடித்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கடற்படையினரால் தாக்கி அழிக்கப் பட்ட கப்பல் யுத்த தளபாடங்களை ஏற்றிச் சென்றதாக கடற்படையினர் கூறியிருப்பது முற்றிலும் பொய்யானதும் திரிபுபடுத்தப்பட்ட கற்பனைச் செய்தியென்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

எமது வர்த்தகக் கப்பலில் சென்ற கப்பல் கப்டன் உட்பட 11 போராளிகளையும் தாக்கி அழித்த நடவடிக்கையானது, இலங்கை இராணுவத்தினர் வன்முறைகளை விரும்புகின்றனர் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது என்று அக்கடிதத்தில் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார். (வ)

## நாளை நல்லிணக்கக் குழுக்கூட்டம்

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கிராமிய புனர்வாழ்வு நல்லிணக்க குழுவின் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ளது

இப்பகுதியில் உள்ள ஒவ்வோர் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கிராமிய அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனர்அமைப்பு தொடர்பாகக் கலந்துரையாடப்பட உள்ளதால் சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் இயங்கும் சமூக அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளை மேற்படி கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு உதவிப்பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.(க-252)

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியப் பொதுக்கூட்டம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டமும் வருடாந்த மாநாடும் எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மனித உரிமைகள் அமைப்பும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் இணைந்து நடத்திய மனித உரிமை தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும். (க-10)

# வைத்தியசாலைகள் சுத்திகரிப்பு தனியாரிடம் ஒப்படைக்கப்படும்

### அமைச்சுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் கீழ் இயங்கும் வைத்திய சாலைகள் மற்றும் நிறுவனங்களினை சுத்திகரிக்கும் பொறுப்பு தனியாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இப்பொறுப்புக்களை தனியாரிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் செயலாளர் றெஜி பெரேரா அறிவித்துள்ளார்.

இவ்வமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் பூந்தோட்டப் பராமரிப்புப் பணிகளும் தனியாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இதன் பொருட்டு முறையான கேள்விப்பத்திரங்களும் கோரப்படவுள்ளன. இதனால் வைத்தியசாலைகளில் நிலவும் சுத்திகரிப்பு ஊழியர்களுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர் காலங்களில் சுத்திகரிக்கும் ஊழியர்களை நியமிக்கும் விடயத்தில் நிதி அமைச்சு, நிதி எதுவும் ஒதுக்காது எனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (க-8)

# சரியான முகாமைத்துவம் இல்லை கல்விச் செயற்பாடுகள் சீர்குலைவு

### கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகள் அனைத்திற்கும் கல்வி அமைச்சும், மாகாண சபைகளும் சகல வசதிகளையும் வழங்கி வருகின்ற போதிலும் சரியான முகாமைத்துவம் இல்லாதமையால் கல்விக் கொள்கையினை நடைமுறைக்கு இடுவதில் பெரும் பின்னடைவு காணப்படுகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கல்வி, கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், நாட்டில் உள்ள 93 கல்வி வலயப் பிராந்தியங்களில் 80 கல்வி வலயப் பிராந்தியங்களுக்கு அடிப்படைத் தகைமையற்றவர்களை பணிப்பாளர்களாக முன்னைய அரசு நியமித்துள்ளது.

அப்போதைய ஆட்சியில் இருந்த சில அரசியல்வாதிகளின் செல்வாக்கைப்பயன்படுத்தியே இத்தகைய நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமன்றி, கல்வி முகாமைத்துவ சேவையில் 200 பேரிற்கான பதவி வெற்றிடங்கள் இருந்தபோதும் 120 பதவிகள் இது வரையும் நிரப்பப்படாமல் உள்ளன.

இதேவேளை, எமது அரசாங்கம் கல்வித்துறைக்காக வருடம் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாவினை செலவிட்டு வருகிறது.

இனிமேல் கல்வித்துறைக்கு இவ்வளவு பெருந்தொகையான பணத்தை செலவிட அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார். (க-10)

# தமிழக பிரமுகர் இலங்கை வருவார்

(கொழும்பு)

இலங்கை மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களிற்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களையடுத்து, கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக திருவனந்தபுரத்திலுள்ள கைது செய்யப்படும் அப்பாவி மீனவர்களை விடுவிக்கப் போராடும் தோழமைக் கூட்டணியைச் சேர்ந்த அன்ரனி வெந்திலாஸ் இலங்கை வந்துள்ளார்.

இவர் இலங்கை சிறைகளில் உள்ள திருவனந்தபுர மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகவே இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)





அண்மையில் நடைபெற்ற யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு நா. வரதராஜாவும், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லாயன் கன்னியர் மடத்தலைவி அருட்சகோதரி சகாயமரியாவும் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதை 1ஆம் படத்திலும், பாடசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாண்ட் வாத்திய குழுவினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மட்டு. முஸ்லீம் பிரதேசங்களில் புனர் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களின் புனர் நிர்மாணப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப் படவுள்ளன.

ஏறாவூர் பிரதேசசபைக் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் வீடமைப்பு பிரதி அமைச்சர் வசீர்சேகு தாகு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் சிரான் உபகுழுவின் மூலம் திரட்டப்படவுள்ளன.

இதற்காக சிரான் புனர்நிர்மாணம் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளும் உபகுழுக்கள் காத்தான்குடி, ஓட்டமாவடி, ஏறாவூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

விசேட உபகுழுக்கள் நீண்ட காலமாக புனர் நிர்மாணம் செய்யப்படாதுள்ள நீர் விநியோகம், வீதிபுனரமைப்பு மற்றும் கல்வி,சுகாதாரம் ஆகியன தொடர்பான விபரங்களை திரட்டவுள்ளது. (க-8)

# இலவச புகையிரத ஆணைச்சீட்டுகள் புதிய நடைமுறை விரைவில் அமுல்

(சுதுமலை)

அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படும் இலவச புகையிரத ஆணைச்சீட்டுகளிற்கு திணைக்களத் தலைவரால் வழங்கப்படும் உறுதிப்பத்திரத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்படும் குறியீட்டு எண், இறப்பர் முத்திரையில் இடப்படவேண்டும் என இலங்கை புகையிரத திணைக்களப் பணிப்பாளர் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இச்சுற்று நிருபம் சகல திணைக்களங்கள், அமைச்சுக்களின் தலைவர்களிற்கும் மற்றும் புகையிரத நிலைய அதிபர்களிற்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எந்த திணைக்களத்து ஊழியருக்கும் திணைக்களத் தலைவர் புகையிரத ஆணைச்சீட்டு வழங்கும் போது தனது கையொப்பம் இடப்பட்டு அலுவலகத்தின் பெயர், நிறுவனத் தலைவரின் பதவி, இடம் என்பன கட்டாயம் இறப்பர் முத்திரை மூலம் பொறிக்கப்பட வேண்டும எனவும், மேலும் ஆணைச்சீட்டு எழுதிய பின் திகதி, பெயர், வயது பதவியில் எந்த சிறு மாற்றம் செய்தாலும் உடன் அதிலே கையொப்பம் இடப்பட்டு அவ்விடத்தில் திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை இடப்பட வேண்டும் பயணம் செய்யும் திகதி இடப்பட்டால் அதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அல்லது ஒரு வாரத்திற்குப் பின்னர் பயன்படுத்தி பயணச்சீட்டு பெறப்படலாம் எனவும் இந்த நடைமுறை ஏப்ரல் மாதம் நடை முறைக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் புகையிரத ஆணைச்சீட்டுக்களில் செய்த மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே, இந்த புதிய நடைமுறை அமுல் படுத்தப்பட உள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-252)

# வில்பத்துப் பூங்கா மீண்டும் நேற்றுத் திறக்கப்பட்டது

(கொழும்பு)

வில்பத்து தேசிய பூங்கா சுற்றுலாப் பயணிகளின் நன்மை கருதி மீண்டும் நேற்று திறக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழல் காரணமாக 1986ஆம் ஆண்டு இப் பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டது. தற்போது வனவள பாதுகாப்புசபை மேற்கொண்ட நடவடிக்கையினைத் தொடர்ந்தே பூங்கா மீண்டும் திறக்கப் பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் வெளி நாடுகளின் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையையும் கருத்தில் கொண்டு இச்சரணாலயம் திறக்கப்பட்டது. (க-8)

### அரசு ~ புலிகள்

# சமாதானப் பேச்சின் முன்னேற்றத்தை பொறுத்தே உலக நாடுகள் வழங்கும் நிதி உதவிகள் அமையும்

## உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே நடைபெறும் பேச்சு வார்த்தையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உதவிகள் அமையும். சமாதானப் பேச்சுக்கள் பின்னோக்கி நகர்ந்தால் உதவி வழங்கும் நிறுவனங்கள் நாடுகளும் கூட பின்நோக்கி நகரலாம்.**

மேற்கண்டவாறு இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுக்கள் மூலமாக நிரந்தரமான தீர்வு ஏற்படும் வரைகாத்திருக்காமலே சர்வதேச நிதியுதவிகளை பெற்றுக்கொள்ளலாம் என்று சிலரிடம் இருக்கும் நம்பிக்கைகள் அர்த்தமற்றவை.

உதவிக்கான உறுதிமொழிகளை நிறுவனங்களும், நாடுகளும் நிறைவேற்றும் வேகமும், நிதியுதவியின் அளவும், சமாதானப் பேச்சுக்களின் தன்மை, ஆழம், வேகம், முன்னேற்றம் என்பவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படும் என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவும் வேண்டும், செய்யவேண்டிய எதற்காகவேனும் காத்திருப்பதால் பயனேதும ஏற்படாது. எக்காலமும காத்திருக்க வேண்டியதாக போய்விடலாம். பொருளாதார நலன்கள் என்றவகையில் சமாதானத்தின் பயன்கள் வந்தடைவது உடனடியாக ஆரம்பிக்காவிட்டால், மீண்டும் சண்டை தொடங்குவதற்கான ஆபத்துச் சூழ்நிலைகள் உருவாகும்.

வேறு பல நாடுகளில் நாம் கண்ட அனுபவங்களிலிருந்து இதனை எம்மால் கூறமுடியும். இதுவரையில் பெரிய நிதி உதவிகளேதும் வடக்கு கிழக்கிற்கு கிடைத்ததாக இல்லை. உலகவங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் மட்டுமே சிறிதளவு தொகையை வழங்கியுள்ளன.

இதேவேளை, ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இடம்பெறும 6ம்சுற்றுப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும முகமாக அரசு, விடுதலைப்புலி கள் உயர் மட்டக் குழுவினர் ஏற் கனவே டோக்கியோ நோக்கி பயணமாகி உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## வலம்புரியின் செய்திக்கு

# யாழ். பாதுகாப்புத் தலைமையகம் மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

வலம்புரிப்பத்திரிகையில் கடந்த 14ம் திகதி வெளியான

✳ வடமராட்சி வ.ச. தலைவரை படையினர் மிரட்டினர்.

✳ சண்டையை ஆரம்பிக்க உள்ளோம் புலிகளிடம் படையினர் தெரிவிப்பு.

ஆகிய இரண்டு செய்திகள் குறித்தும தமது மறுப்பைத் தெரிவித்து யாழ். பாதுகாப்புத் தலைமையக கட்டளை அதிகாரி கப்டன் பீரீ. லியனகே நேற்று வலம்புரிகு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு,

பதிப்பாசிரியர்
வலம்புரிப்
பத்திரிகை

2003.03.14ம் திகதி தங்களது பத்திரிகையில் பிரசுரமாகிய கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இரு செய்தி சம்பந்தமாக தங்களது கவனத்திற்கு அறியத்தருகிறேன்.

✳ வடமராட்சி வ.ச. தலைவரை படையினர் மிரட்டினர். சர்வதேச கடற்பரப்பில் கடற்படையினரின் வலிந்த தாக்குதலினால்வரச்சா வடைந்த 11 போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் வடமராட்சிப் பகுதியில் கொடிகள் கட்டி சோடினையில் ஈடுபட்ட வடமராட்சி வர்த்தகசங்கத் தலைவரை படையினரின் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டில் புலிகளின் செயற்பாடுகள், நடமாட்டங்கள குறித்து தீவிரமாக துபபுத் துலககி வரும் படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலகளாகும. இந்த நடவடிக்கைகள் குறித்து விடுதலைப்புலிகளின்.யாழ். மாவட்ட அரசியல் பிரிவினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக குழுவினருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

✳ சண்டையை ஆரம்பிக்க உள்ளோம புலிகளிடம் படையினர் தொவிப்பு. முகமாலைச் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த படையினர் நேற்று வன்னிப்பகுதி யிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கையல் போராளிகள்சிலரை எச்சரித்ததாக புலிகள் தரப்பிலிருந்து வெளியான செய்திகள தெரிவிக்கின்றன. அரசியல் பணிகளை மேற்கொள்ளும் வகையில யாழ்ப் பாணம் வந்துகொண்டிருந்த போராளிகள் சிலரை படையினர் சோதனைச்சாவடியில் தடுத்து வைத்து சோதனைக்குட்படுத்திய துடன், தாங்கள் சண்டையை ஆரம்பிக்கப்போவதாகவும வீனாக யாழ்ப்பாணம் சென்று மாட்டிக் கொள்ளாதர்கள் என்று கூறியதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரு செய்திகள் தொடர்பாக சம்பந்தப் பட்ட பகுதியில் நிலைகொண்டுள்ள சேனைப் பிரிவு மற்றும் படையணி தலைமையகத்தை எமது தலைமையகம் விசாரணை மேற்கொண்ட போது செய்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ள வகையில் படை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களினால் எந்தவொரு நபரும் எச்சரிக்கை செய்யப்படவில்லை.

மேலும், முகமாலைச் சோதனைச் சாவடியில் கடந்த 13ம் திகதி கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களிடமும் இந்த சம்பவம் தொடர்பாக கேட்டபோது, அவ்வாறு எச்சரிக்கை விடுக்கவோ அல்லது மீண்டும் சண்டையை ஆரம பிக்கப்போவதாகவோ யாரிடமும் அவர்கள் கூறவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள செய்தி தங்களுக்கு தகவல் தருபவரினால் தெரிவிக்கப்பட்ட பொய்யான செய்தி என தெரிவிப்பதுடன், அவ்வாறான செய்தியைப் பிரசுரித்து இராணுவத்தினர் மீது அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், பிரசுரமான செய்தி பொய்யானவை என்பதால் அதைத் திருத்தி தங்களது பத்திரிகையில் மீள் பிரசுரிக்குமாறு தயவுடன் வேண்டிக்கொள்கின்றேன் என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)


இலங்கை மின்சார சபை

யாழ். பிரதேச அலுவலகம

**மின்பாவனையாளர் சேவை நிலைய மாற்றங்கள்**

தற்போது யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, அரசடி வீதிச் சந்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் யாழ். பராமரிப்பு மின்பாவனையாளர் சேவை நிலையம் (திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், இருபாலை, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி, நீர்வேல ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது) 2003.03.19ஆம் திகதி தொடக்கம் கொக்குவில், குளப்பிட்டிச் சந்தி, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்றிற்கு இடம் மாறவுள்ளது என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறேன்.

இதுவரை சுன்னாகம் மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட தாவடி, சுதுமலை ஆகிய பிரதேசங்கள் 2003.04.01ம் திகதி தொடக்கம் மேற்குறித்த நிலையத்தின் கீழ் வருகின்றன. யாழ். பராமரிப்பு மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நீர்வேலி, கரந்தன் ஆகிய பிரதேசங்கள் சுன்னாகம் சேவை நிலையத்துடன் இத்திகதி முதல் இணைக்கப்படுகின்றன.

அதே தினம் முதல் சுன்னாகம் சேவை நிலையத்தின் கீழ் இது வரை இருந்த இளவாலை, மாதகல் ஆகிய பிரதேசங்கள் சித்தன்கேணியில் இயங்கிவரும் வட்டுக்கோட்டை மின்பாவனையாளர் சேவை நிலையத்துடன் சேர்க்கப்படுகின்றன.

இந்த மாற்றங்களை அவ்வப்பகுதி மின்பாவனையாளர்கள கவனத்திலெடுத்து உரிய அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் மின்னிணைப்பு சம்பந்தமான வேலைகளைச் செய்வித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*பிரதேச மின் பொறியியலாளர்*
*இலங்கை மின்சார சபை,*
*யாழ். பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை.

(C/5850)


# ரஷ்ய 'இக்லா' ஏவுகணையை புலிகள் வாங்கமுயற்சி?

## - அரசின் விளக்கத்தை கோருகிறார் சரத்அமுனுகம

(கொழும்பு)

தரையிலிருந்து வான்நோக்கி வேட்டுகளை தீர்க்கக் கூடிய "இக்லா" என்னும் ரஷ்யததயாரிப்பு ஏவுகணைகளை கொள்வனவு செய்வதற்கு புலிகள் முயற்சித்ததாக ரஷ்ய தூதரகம் தெரிவித்த விடயம் பற்றி ஐ.தே.மு. அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் என்று பொ. ஐ.மு யின் செய்தியாளர் மாநாட்டில் சரத் அமுனுகம கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் பேசிய அமுனுகம, இது தொடர்பான விளக்கத்தை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும், இது தொடர்பான கடிதம் ஒனறை ரஷயத் தூதுவர் வெளியுறவு அமைச்சிடம் கையளித்துள்ளாரென்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் கடவுச்சீட்டு வழங்கப்பட்ட இருவர் லாவோஸ நாட்டில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பற்றிய விபரங்கள் பெறுவதில ஈடுபட்டிருந்தனர். காவிச் செல்லக் கூடிய "இக்லா' ரக ஏவுகணையை வாங்குவதற்கு முயற்சி செய்தனர். இது பற்றி அரசாங்கம் எதுவித நடவடிக்கையிலும், ஈடுபடாதிருக்கிறது என்று அமுனுகம மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (த)

# சிரான் அலுவலகத்தில் நேற்று முக்கிய கூட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு கடற்பிரதேசங்களின் மீன்பிடி தொடர்பாக நேற்று கிளிநொச்சி சிரான் அலுவலகத்தில் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வடக்கு-கிழக்கு பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் போது இந்திய மீன்பிடிப்படகுகளின் அத்துமீறல்கள், இலங்கை இராணுவத்தினரின் தடைவிதிப்புக்கள் குறித்து ஆராயப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-08)

## வேதனை தீர்த்திடுவாய்

வண்ணையிலே வண்ணமுற வரமருளும் வைத்தீஸ்வரா
பொன் எழில் பாதம் போற்றுகிறோம் போற்றுகிறோம்
எண்ணமுற ஏற்றிடுவாய் எளியோர் எமையெல்லாம்
திண்ணமுற தமிழர் நாம் தாயகத்தில் சிறந்தோங்க
வெண் அம்பு பு,ட்டி நீயும் வேத்னை தீர்த்திடுவாய்
தங்க ரதம் ஏறி தலைவா நீ யெழுந்தாய் - இனி
தரணியெங்கும் தமிழ் சிறக்கும் எழில் பு,க்கும்

**வி. ஜெயம்**

## வாலாம்பிகா நாயகனே தேரேறிவருக!

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானே தேரேறி வருக
கட்டுக்குள் கைகட்டி நின்றவனே தேரேறி வருக
பிரம்படியை பெருமையுடன் ஏற்றவனே தேரேறி வருக
பிச்சாண்டி வேடம் தரித்தவனே தேரேறி வருக
முல்லை மலராகி முத்தமிழைப் பூப்பவனே தேரேறி வருக
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்பவனே தேரேறிவருக
கங்கைத் தலையானே கருநீலம் உண்டவனே தேரேறிவருக
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தவனே தேரேறிவருக
பற்றெல்லாம் விட்டு பரதேசி ஆனவனே தேரேறிவருக
கற்றைச் சடையானே கைலாய மலையானே தேரேறிவருக.
வண்ணைப் பதியானே வாலாம்பிகா நாயகனே தேரேறி வருக.
எண்ணரிய சமாதான வாழ்வை தந்தருளும் ஈசனே! தேரேறிவருக.

*கவிமாமணி காரை எம்.பி. அருளானந்தன்*

## ஈரான்-ஈராக் நாடுகளில் கைதிகளை விடுவிக்க பரஸ்பரம் இணக்கம்

(தெஹறரான்)

ஈரானும்-ஈராக்கும் தமக்கிடையிலான போர் கைதிகளை பரஸ்ப்ரம் பரிமாறிக் கொள்வது என்று அறிவித்துள்ளன.

இதன் அடிப்படையில் 941 ஈராக்கிய கைதிகளை ஈரானும் 349 ஈரானிய போர்க் கைதிகளை ஈராக்கும் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை விடுவிக்கவுள்ளன.

இதனை சம்பந்தப்பட்ட அரசுகள் உறுதி செய்துள்ளன. (உ-2)

## சீனாவில் புதிய ஜனாதிபதி தெரிவு

(பெய்ஜிங்)

சீனாவின் புதிய ஜனாதிபதியாக ஹு"ம்ஜிங்ரோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சீனாவின் முன்னாள் ஜனாதிபதியான ஜியாங் ஷெமினுக்கு புதிய அரசில் இரண்டு முக்கிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சீனாவின் வெளி விவகாரங்களுக்குமத்திய இராணுவஆணைக்குழுவுக்கும் அவர்பொறுப்பாக நியமிக்கப பட்டுள்ளார்.

நேற்றுக்காலை நடை பெற்ற மக்கள் பிரதிநிதிகள் மாநாட்டில் இத் தெரிவுகள் இடம் பெற்றன. இம் மாநாட்டில் சுமார் 3ஆயிரம் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.(உ-2)

### ஈராக் போருக்கு எதிராக

# அதிபர் புஷ்ஷின் வெள்ளை மாளிகையை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் 100க்குமதிகமான நகரங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் சனிக்கிழமையன்று அமெரிக்க அதிபர் புஷ்ஷின் வெள்ளைமாளிகையை முற்றுகையிட்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தனர்.

ஈராக் மீது போர் தொடுக்கும் எண்ணத்தைக் கைவிடும்படி அவர்கள் அதிபரைக்கேட்டுக கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மேளங்களைத்தட்டிக் கொண்டும்,பாட்டுக்களைப் பாடிக்கொண்டும் சுலோக அட்டைகளைத் தாங்கியபடியும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கொடிகளை அசைத்துக் கொண்டு சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷித்தனர்.

''எமது படைகளைத் திருப்பி அழையுங்கள்'' எண்ணெய்காக இரத்தம் கொடுக்க முடியாது, ''அதிபர் புஷ் உமது மக்கள் சொல்வதைக்கேளும்'' என்றெல்லாம் சுலோகங்கள் கோஷிக்கப் பட்டன.

ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் பேசிய ஹாவர்ட் பல்கலைக்கழக மாணவர் கனஷியாமில்ஸ் ''ஈராக் மக்கள் எமது எதிரிகள் அல்லர், அவர்கள் எமது சகோதர சகோதரிகள்" என்று கூறினர்.

நியூயோர்க் நகரிலிருந்து வந்த 25வயதான இரண்டு பிள்ளைகளின் தாயான பெற்றி குரோட்டோ கூறுகையில், ''எங்களிடமே பேரழிவு ஆயுதங்கள் தாராளமாகவிருக்கின்றன. இதே நிலை அமெரிக்காவுக்கும்வரலாம், எனது பிள்ளைகளும பாதிக்கப்படலாம். அமெரிக்கத் தலைவர்கள் கபடமாக நடக்கிறார்கள்" என்றார்.

சனிக்கிழமை அமெரிக்காவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற அதே சமயம் ஐரோபபா,ஆசியா, அவுஸ்ரேலியாவிலும் ஏககாலத்தில் நடதததப்பட்டுள்ளன.

புஷ்சனிக்கிழமை வாஷிங்டனுக்கு வெளியில் கேம்படேவிட்டில் கழித்தார். என்றாலும் தமது வாராந்த சொற்பொழிவை அவர் நிகழ்த்தினார். அமைதியான முறையில். சதாம் ஆயுதக்களைவு செய்வார் என்று தாம் எதிர்பார்க்கவில்லையென்றார்.

### டோக்கியோ, லண்டன் ஆர்ப்பாட்டம்

ஈராக்கிற்கு எதிரான போர் நிகழும் அபாயத்தைத் தொடர்ந்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கிட்டத்தட்ட 10ஆயிரம்பேர் போர் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர்.

இவர்கள் போர் எதிர்ப்பு வாசகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

தாய்லாந்தில் ஐ.நா கட்டடத்திற்கு முன்பாக ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு கோஷங்களை எழுப்பினார்கள்.

மனித உரிமைகள் அமைப்பினைச் சேர்ந்தவர்களும், இஸ்லாமிய குழுக்களைச் சேர்ந்தவர்களும் ஈராக் தாக்கப்டுவதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அதைப்போல லண்டனிலும்போரிற்கு எதிராக குரல் எழுப்ப மக்கள் தயாராகி வருகின்றனர். (பி-9)

WORLD NEWS உலக தரிசனம்

# 2வது தீர்மானம் பற்றிய பிரி.முயற்சி தோல்வி

(பக்தாத்)

ஈராக் விவகாரம் தொடர்பாக ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் 2வது தீர்மானம்ஒன்று நிறைவேற்றப் படவேண்டும் என்ற பிரிட்டனின் தீவிர முயற்சிகள் தோல்வியடைந்துள்ளது.

ஈராக்கில் புதிய சோதனைகள் நடத்துவதற்கு மேலும் கால அவகாசம் வழங்குவதற்கு பொது இணக்கப்பாடு காணவேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்து வரும் நாடுகளில் ரஷயா தனது பலத்த எதிர்ப்பைத் தெரிவிப்பதை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. 1441வது தீர்மானத்திற்கு உடனடியாகவும், முழுமையாகவும் கட்டுப்பட ஈராக் முன்வரவேண்டும் எனவும் தவறினால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும எனவும் பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர் கூறியுள்ளார்.

எனினும் ஈராக் விடயத்தில் அவர் பின்பற்றும் கொள்கைகளிற்கு பிரிட்டனின் அரசியல்வாதிகள் மத்தியில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளதுடன் அவரது அரசாங்கத்தைச் சேர்ந்தஉறுப்பினர் பதவி விலகப் போவதாகவும் எச்சரித்துள்ளனா.

இதேவேளை பிரிட்டனில் 20வீதத்திற்குக்குறைவானோரே யுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட ரஷ்யா, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் உட்பட பெரும்பா லான நாடுகள் எதிர்த்து வருகின்றன.

ஈராக்கில் ஆயுதக்களைவு மேற்கொள்ளும் விவகாரம் குறித்து ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் தோன்றியுள்ள மாறுபட்ட கருத்துக்கள் நீக்கப் பட்டு ஒருபொது உடன்பாடு காணப் பட வேண்டும் என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி திரு.பில் கிளின்டன் கூறியுள்ளார்

பொது உடன்பாட்டுடன் கூடிய தீர்மானம் ஒன்று ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே ஈராக் போரைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். பாதுகாப்புப் பேரவை ஒருமித்த தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஆயுதக் களைவை மேற்கொள்ள ஈராக் ஜனாதிபதி சதாம் ஹு"சைன் நிர்ப்பந்திக்கப்படுவார் எனவும் பில்கிளின்டன் சுட்டிக் காட்டினார். (பி-9)

# தொலைபேசியை எடுக்க முயன்ற மூவர் மரணம்

(கென்யா)

மூடப்பட்ட மலசல கூடக்குழியினுள் தவறிவிழுந்த கைத்தொலைபேசியை எடுப்பதற்கு குழியினுள் இறங்கிய மூவர் மரணமாகிய சம்பவம் நைரோபியில் நடைபெற்றுள்ளது. கென்யா நாட்டின் மொம்பாசா என்னும் கரையோரக்கிராமப் பகுதியல் வீடொன்றிலுள்ள மலசல கூடக் குழியினுள் கைத்தொலைபேசி தவறி குறியினுள் வீழ்ந்து விட்டது. அதனை எடுத்துத்தருபவருக்கு 1000 ஷிலிங் பணம் தருவதாக அதன் உரிமையாளர் கூறினார்.

நாளொன்றுக்கு ஒரு டொலரிலும் குறைவாகவே சம்பாதிக்கும் வறியவர்கள் அதிகம் வாழும் நைரோபியில் 14டொலர்கள் கிடைப்பதை தவறவிடவிரும்பாத ஒரு 30வயது ரேடியோ தொழில்நுட்ப ஊழியர் முதலில் குழியினுள் இறங்கினார். ஆளேதிரும்பவில்லை. அவரது நண்பர் இரண்டாவதாக இறங்கியபோது ஏணி வழுக்கி அதனுள் வீழ்ந்து விட்டார். இவர்கள இருவரையும் காப்பாற்றும் முயற்சியில இறங்கிய மூன்றாமவர் வெளியே நின்றவர்களால் இழுத்து எடுக்கப் பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செலலப்படும் வழியில் இறந்து போனார். நான்காவது நபர் ஒருவரும் குழியினுள் இறங்க முயற்சித்தாராயினும் பொலிஸாரால் தடுக்கப்பட்டார் என்று கென்யா நாட்டு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது. (பி)

### பாகிஸ்தான் விஞ்ஞானிகள்

# யு.எஸ்.மீது அணுகுண்டு வீச ஆலோசனை நடத்தினர்?

(இஸ்லாமாபாத்)

செப்ரெம்பர் 11ல் நடத்தப்பட்ட பயங்கரவாதிகளின் தாக்குதலிற்கு 2மாதங்களிற்குப் பிறகு பாகிஸ்தானின் அணுசக்தி விஞ்ஞானிகள் ஒஸாமா பின்லேடனை சந்தித்தாக பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் செய்திகள் கூறுகின்றன.

புகழ் பெற்ற அணுசக்தி விஞ்ஞானியான சுல்தான் வஷிருதின் மொகமட் உள்ளிட்ட குறைந்ததுப் பாகிஸ்தானிய விஞ்ஞானிகள் ஒஸாமா மற்றும் அவரது கூட்டாளிகளை காமூரில் சந்தித்து அமெரிக்கா மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தியதற்கான சாத்தியக்கூறு பற்றி திட்டமிட்டதாக தெரியவந்துள்ளது.

ஒஸாமாவிடம் அணுஆயுத தொழிலநுட்பம் பற்றி விவாதித்ததாக அமெரிக்க அதிகாரிகள் நடத்திய விசாரணையில் வஷிருதின் மொகமட் ஒத்துக் கொண்டுள்ளார்.

வஷிருதின் மொகமட் பாகிஸ்தானின் அணுசக்தி கமிட்டியின் உயர்ந்த பதவியில் இருந்தவர் மற்றும் பாகிஸ்தானின் அணுசக்தி திட்டத்தை தொடக்கியவர்களுள் ஒருவர்.

அவரது சக ஊழியர்ான அப்துல் மஜீத்தும் தீவிரவாதப் போக்குக் கொண்டவர் உளவு அமைப்பான ஐ.எல்.ஓவின் முன்னாள் தலைவர்கள் 2பேர்களுடன் லக்ஸரிக்கைபாவின் வருடாந்த மாநாட்டிலும் இவ்களை கலந்து கொண்டுள்ளனர். (பி-9)

# பாக்.மீதான அமெரிக்க பொருளாதாரத் தடை நீக்கம்

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் மீதானப் பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்கிள்ளது. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வெள்ளிக்கிழமை இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

1999-ல் இராணுவப் புரட்சி மூலம் முஷாரப் ஆட்சியைப் பிடித்தவுடன் பாகிஸ்தான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் பாகிஸ்தானின் ஆதரவு தேவை என்ற நோக்கத்தில் பாகிஸ்தான் மீதானப் பொருளாதாரத் தடையை அமெரிக்க தற்போது நீக்கியுள்ளது.

பாகிஸ்தான் மீதானப் பொருளாதாரத் தடை நீக்கம் காரணமாக பாகிஸ்தானுக்கு கோடிக் கணக்கில் பொருளாதார உதவிகள் கிடைக்கும்.

அமெரிக்காவின் இந்தத் தடை நீக்கத்தால் பாகிஸ்தானில் ஜனநாயகம் மலர வழிவகுப்பதோடு அமெரிக்காவின் பயங்கரவாத ஒழிப்புக்கு பாகிஸ்தானின் ஒத்தழைப்பு கிடைக்கும் என்றும் தெரிகிறது.

இதனிடையே பாகிஸ்தான் பிரதமர் ஜபருல்லா ஜமாலி வரும் 28ஆம் திகதி புஷ்ஷைச் சந்திக்கிறார் என்று வெள்ளை மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் ஈராக் மீதான போர் திட்டம் உள்ளிட்ட சர்வதேச, இருதரப்பு விஷயங்கள் குறித்து இருவரும் விவாதிக்க உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(பி)


# காணாமல் போன இளம் பெண் கண்டு பிடிக்கப்பட்டாள்

(சோல்ட் லேக் சிற்றி)

ஒன்பது மாதங்களுக்கு முன் படுக்கை அறையிலிருந்து கடத்திக் செல்லப்பட்ட 15வது யுவதி மீண்டும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இது ஒரு 'அற்புதம்' என்று அந்த சிறுமியின் பெற்றோர் கூறினர் இப் பெண் எதற்காக கடத்தப்பட்டார். என்று தெரிவிக்கப்படவில்லை. இந்தக் கடத்தல் தொடர்பாக வீதிகளில் உபதேசம் செய்பவரான பிரெயின் டேவிட் திச்சல் என்பவரும் வான்டா பார்ஸீ என்று பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் சொந்த இடத்திலிருந்து 15மைல்களுக்குகப்பால் கடந்தப்பட்ட எலிஸபெத் ஸ்மார்ட் என்ற அப்பெண்ணை வேறு இருவருடன் கண்ட அப்பகுதி மக்கள் சந்தேகம் கொண்டு பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.(பி)




9மாதங்களுக்குப்பின் கடத்தல் காரர்களிடமிருந்து தப்பிவந்த எலிஸபெத் ஸ்மார்ட் தனது தம்பியுடன் காணப்படுகின்றார். அவரது மீள் வருகையையொட்டி கோல்ட்லேக் நகர் உடடாஹ் என்ற அவரது சொந்தவூரில் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. மேலே அவரது பெற்றோர் நன்றி தெரிவிக்கின்றனர்.

உலகில் நானே அதிர்ஷ்டசாலிப் பெண் உங்கள் அன்பிற்கும் பிரார்த்தனைக்கும் நன்றி. ஆசை நிறைவேறியுள்ளது. நான் வீடுவந்து சேர்ந்து விட்டேன் எல்லாரையும் நேசிக்கிறேன் என்றுஎலிஸபெத் அப்பகுதிமக்களுக்குத் தெரிவித்தார்.

# இந்தியாவில்160 சீ.ஐ.ஏ உளவு மையங்கள்

(புதுடில்லி)

இந்தியாவிற்குள் செயல்படும் 160 ஐ.எஸ்.ஏ உளவு மையங்களை அடையாளம் கண்டிருப்பதா கவும் அவற்றை கலைக்கும் பணி தொடங்கி விட்டது என்றும்துணைப் பிரதமர் திரு. எல். கே அத்வானி கூறியுள்ளார்.

அண்மையில் பம்பாயில் ஒரு ரயில் வண்டியில் குண்டு ஒன்று வெடித்தது பற்றி குறிப்பிட்ட அவர் 1993ல் நிகழ்த்த தொடர் குண்டு வெடிப்புப் போன்ற ஒரு பயங்கரமான பாதக செயலிற்கு பயங்கரவாதிகள் திட்டம் போட்டனர். ஆனால் அதைப் பாதுகாப்புப் படைகள் முறியடித்து விட்டன என்று கூறியுள்ளார். (பி-9)

## அகழ்வு மீண்டும் ஆரம்பம்

அயோத்தியில் பிரச்சினைக்கு உட்பட்ட இடத்தில் தொல்வியல் ஆய்வுக் குழுவின் அகழ்வுப்பணி நேற்று முன்தினம் மீண்டும் தொடங்கியது.

முக்ரம் பண்டிகையை முன்னிட்டு இது வெள்ளிக்கழமை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.(பி-9)

### அரசு - புலிகள்

# சமாதான முன்னெடுப்பை குழப்ப தீய சக்திகள் கடும் முனைப்பு

(யாழ்ப்பாணம்)

அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை சமாதானத்தைக் குழப்புவதற்கான முயற்சிகளை தீய சக்திகள் முனைந்து வருகின்றன.

பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் வலிகாமம் கோட்டத்தினர் தறபோதைய சமாதான முன்னெடுப்பு தொடர்பாக விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இதில் ஸ்ரீ லங்காாவின் படைத்தரப்பினர் முக்கிய பங்கைவகிக்கின்றனர். சமாதானத்தை குழப்பும் விதத்திலும், மீண்டும் ஒரு யுத்தத்தினை எற்படுத்தி தமிழ் மக்களை அழிக்கும் வகையிலும் ஒப்பந்த மீறல் நடவடிச் கைகளைச் செய்து வருகின்றனர். ஸ்ரீ லங்கா நடவடிக்கைகளைச் செய்து வருகின்றனர் .ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், பொலிஸாரும், கடற்படையினரும் ஒருமித்தும் தனித் தனியாகவும் பல நடவடிக்கைகளைச் செய்துள்ளனர்.

அவர்களின் மீறல் நடவடிக்கைகளில் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் தாக்கப்பட்டது, நெடுந் தீவுக் கடற்பரப்பில் மூன்று கடற் புலிப் போராளிகள் வீரச்சாவு அடைந்தமை, மானிப்பாயில் பெண் போராளிகளின இடுப்புப் பட்டி தொடர்பான தாக்குதல் நடவடிக்கை, பெண் போராளிகளின் முன்னணிக் காவலரண்களுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்த முனைந்தமை உட்படயாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் கடந்த 10ஆம் திகதி சர்வதேச கடற்பரப் பில் வைத்து எமது சரக்குக் கப்பலை தகர்த்தும் அதில் பயணம் செய்த பதினொரு போராளிகள் வீரச்சாவு அடைந்தமை துக்ககரமான சம்பவங் களாகும்.

எமது பொறுமைக்கும் ஓர்எல்லையுண்டு என்பதை அறியாத சிங் களப்படைகள் தான் தோன்றித் தனமாக நடந்து கொள்கின்றன. இவ் வாறாக தொடரும் நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கதும் நிறுத்தப்பட வேண்டியதுமாகும். அதில் முக்கிய பங்கு கண்காணிப்புக் குழுவினரையே சேர்ந்துள்ளது.

புலிகளைச் சீண்டி அவர்களை போருக்கு அழைக்கும் நடவடிக்கைகள தொடராவண்ணம் கண்காணிப்புக் குழுவினர் நீதியான முறையில் செயற்பட்டு இப்படியான சம்பவங்கள் நிகழாமல் தடுக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் நாம் மக்கள் தழுவிய போராட்டங்களை பெரு மெடுப்பில் நடத்த வேண்டிய துர்ப்பாக க்யமான நிலை ஏற்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# முல்லைத்தீவில் புலிகளின் கப்பல் அழிப்பு: ஜப்பான் பேச்சு விரிவாக ஆராயப்படும்

### பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜப்பானில் இருதரப்பு பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெறவுள்ள ஆறாம் சுற்றுப்பேச்சு வார்த்தைகளின்போது அரசியல் விடயங்களே முக்கியமாக ஆராயப்படவுள்ளன.

எனினும் முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த 10 ஆம் திகதி கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்ட கப்பல் சம்பவம் தொடர்பாகவும் ஆராயப்படும்.

நேற்று அதிகாலை ஜப்பான் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக ஜப்பான் புறப்படுவதற்கு முன்னர் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினர் சர்வதேச கடல் சட்டங்களையோ, அன்றி புரிந்துணர்வு உடன்படிக்கையினையோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீறவில்லை.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்கு அரசு உறுதிமொழி தர வேண்டும் என விடுதலைப்புலிகள் இப் பேச்சுவார்த்தையின் போது கோருவர்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப்பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் பங்கு கொள்வது பற்றி மக்கள் மனதில் கடந்த ஒருவார காலமாக சந்தேகங்கள் எழுந்தன. ஆனால் அவர்கள் இப்பேசசு வார்த்தைகளில் கலந்து கொள்வதாக அறிவித்திருப்பது பாராட்டத்தக்கது எனவும் தெரிவித்துள்ளார். (க-8)

### சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது

(மானிப்பாய்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர்களுக்கான 'ஜனாதிபதி விருது' வழங்கும் வைபவம் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி 'கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போ.உல்லாசனன், அ. நித்திய நர்மதன், த.நகுலன்,எஸ் செந்தூரன், ரி. விபுலன், என். ஜீவானந்தன், கே.கோபிநாத்,ரீ.செந்தில்ராஜ், எம்.ரமணன் ஆகியோர் இவ்விருதனைப் பெறவுள்ளனர்.

மேற்படி விருதினைப் பெறவுள்ள மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இவ் வைபவத்தில் கலந்து கொள்ள விரும்பின் தமது விண்ணப்பங்களை எதிர் வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பிலுள்ள இலங்கைச் சாரணர் சங்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-232)

### நேர்வே பிரதி வெளிவிவகாரஅமைச்சருடன்

# டக்ளஸ் குழுவினர் விரிவாகப் பேச்சு

### மனித உரிமைகள் மீறல் குறித்து ம்முறையீடு

(கொழும்பு)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி),ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர்அணி),ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஆகிய தமிழ்அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெலக்கீசனைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ளநோர்வேத் தூதரகத்தில் இடம் பெற்ற இச்சந்திப் பின்போது கடந்த ஒரு வருட காலத்தில் யாழ். மண்ணில் இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கை அரசாங்கமும் இது விடயத்தில் போதிய அக்கறை கொண்டதாக தெரியவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இச் சந்திப்பில்,ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ்தேவானந்தா,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராசா, எஸ்.சிவதாசன், கலாநிதி கே.விக்கினேஸ்வரன் மற்றும் ஈ.பி.ஆர். எல்.எவ் சார்பில் சுகு,ஈரோஸ் சார்பில் சங்கர்ராஜியும் கலநது கொண்டனர்.

இதேவேளை, அம்னெஸ்டி இன்டர் நேசனல் எனப்படும் சர்வதேச மன்னிப்புச்சபையின் முன்னாள தலைவரும் சர்வதேசரீதியில் மனித உரிமைகள் நிலை நிறுத்தப்படுவதில் தீவிர அக்கறை கொண்டவருமான இயன் மார்ட்டீன் கடந்த வெள்ளியன்று ஈ.பி.டி.பி,புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ ஆகிய கட்சிகளை கூட்டாகச் சந்திதத்துப் பேசினார். செயலாளர் நாயகம் கே. என்.டக்ளஸ் தேவா நந்தா தலைமையில் ஈ.பி.டி.பி. தூதுககுழுவின், புளொட்தலைவர் சித்தார்த்தன், ஈ.பி. ஆர்.எல். எவ்.பின் சுகு,ஈரோஸின் சங்கர் ராஜி ஆகியோர் இச் சந்திப்பில்பங்கேற்றனர்.

இது விடயம் குறித்து இயன் மார்ட்டீன் கருத்துவெளியிடுகையில்;

அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் போது தானும் கலந்து கொள்ள இருப்பதாகவும் எனினும் தனிநபர் என்ற வகையில் தனது பங்களிப்பு எத்தகையதாக இருக்கிறது என்பது இன்னமும் தெளிவு படுத்தப்படவில்லை எனவும் குறிப்பிட்டார். இருந்தும் இவ் விடயங்கள் குறித்து ஆழமாகப் பரிசீலனை செய்துபரிகாரம் காண தம மாலியன்ற முயற்சிகள் மேறகொள்வதாகக் குறிப்பிட்டார். (க)

### க.பொ.த. உயர்தரம்

# சமயம், இந்து நாகரிகம் இன்று முன்னோடிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

உயர்தரம் கலைப்பிரிவில் 2003 பரீட்சைக்கு இந்து நாகரிகம், இந்து சமயம் போன்ற பாடங்களில் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடி எழுத்துப்பரீட்சை இன்று 17-19ஆம் திகதிவரை காலை9 மணிதொடக்கம் யாழ்ப்பாணம், வவுனியா,மன்னார்,கிளிநொச்சி, சிலாபம்ஆகிய இடங்களில் சைவ பரிபாலசபையினரால் நடத்தப்படவுள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் இடம் பெறும்.பரீட்சை நிலையங்கள் பின்வருமாறு;

யாழ். மத்திய கல்லூரி,யா/ வைத்தீஸ்வராக்கல்லூரி,யா/கனகரத்தினம மகாவித்தியாலயம்,யூனியன் கல்லூரி தெல்லிப்பழை, மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை மானிப்பாய், விக்ரோரியாக் கல்லூரி சுழிபுரம், நயினாதீவு மகா வித்தியாலயம், இந்துக்கல்லூரி வடமராட்சி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் வீரசிங்க மகாவிததியாலயம் ஆகிய இடங்களில் நடத்தப் படவுள்ளது என சைவபரிபாலனசபையின்பரீட்சை செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார். (க-7)

# செய்தித் துளிகள்

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்ெழுத்துக் கழகத்தின் 17 வது ஆண்டு நிறைவுப்பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்,புதிய செயற்குழு தெரிவு இடம்பெறவுள்ளது. (உ)

### மிதிவெடி அகற்றல்

(கல்வயல்)

தென்மராட்சி, கைதடி, நுணாவில், வைரவர் கோவிலடிப்பகுதியில் ஹலோட்றெஸ்ற் நிறுவனத்தால் மிதி வெடி அகற்றும் பணி கடந்த புதன் கிழமை முதல் நடை பெற்று வருகின்றது. (உ-36)

### இசைக்குழு உருவாக்கம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபையின் பணியாளர்களை இணைத்து இசைக்குழு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்மாநகர ஆணையாளர் மு. இராமலிங்கம் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி இசைகுழுவுக்கு வேண்டிய இசைக் கருவிகள் கொள்வனவுக்கு 2 இலட்ச ரூபா நிதியினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப பினர் என். ரவிராஜ் வழங்கியுள்ளார். (உ-51)

### பயிற்சிப் பட்டறை

(சில்லாலை)

மாதகல் கிழக்குJ/150 கிராம அலுவலர் பிரிவின் சகாயபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு மகளிருக்கான நான்காவது பயிற்சிப்பட்டறை அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தின் சமூக மேம் பாட்டுப் பிரிவினரால் நடத்தப்படவுள்ளது. (க-58)

### நிர்வாக சபைத்தெரிவு

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலக் ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் இவ் வாண்டிற்கான நிர்வாக சபைக கூட்டம் அண்மையில் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தலைவராக தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரனும், செயலாளராக செ.சிவராசாவும், உப செயலாளராக க.வாமதேவனும்,பொருளாளராக ப. சுதனும், கணக்காய்வாளராக ச. வீரசிங்கமும் தெரிவு செய்யப் பட்டதுடன்,10 நிர்வாகசபை உறுப் பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-36)

* * *

(அளவெட்டி)

அளவெட்டி சைவவாலிபர் சங்க நடப்பாண்டிற்கான நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் மேற்படி சங்கத்தில் இடம்பெற்றது.

தலைவராக க. சண்முகநாதனும், செயலாளராக இ.சர்வேஸ்வராவும், உபசெயலாளராக க.ஞானசொரூபனும் பொருளாளராக செல்வி.மு.சந்திரிகாவும்தெரிவுசெய்யப்பட்டனர். (உ-83)

### கத்தி வெட்டில் காயம்

(கரணவாய்)

கொடுக்கல் வாங்கல் பிணக்கினால் ஏற்பட்ட தகராறு கத்தி வெட்டில் முடிந்தது.

கரவெட்டி மேற்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் முகத்திலும் கையிலும் கத்தி வெட்டுக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த கி.சின்னத்துரை (வயது62)நெல்லியடிப்பொலிஸ்நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார. (உ-29)

### அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி ஆசுதோஷானந்தர் தமிழில் மொழி பெயர்த்த 'அன்னை ஸ்ரீசாரதா தேவியின் அன்பு மொழிகள் 'நூல் அறிமுகவுரை விழா எதிர்வரும் 21ஆம்திகதி வெள்ளிக்கிழமைபி.ப. 1.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் திருமதி கே. பொன்னம்பலம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் அறிமுகவுரையை சுவாமி சித்ரூபானந்தா நிகழ்த்தவுள்ளார். (உ)

### கணனிக் கல்வி நிலையம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு வளம் பேணும் சங்கத்தினர் மருதங்கேணி பிரதேசத்தில் கணனிக்கல்வி நிலையம் ஒன்றை விரைவில் திறக்கவுள்ளனர்.

இத்தகைய கணனிக் கல்வி நிலையம் திறக்கப்படுமானால் இப் பிரதேச மாணவர்கள் பெரும் பயன் அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மேற்படி சங்கத்தினர் குடத்தனைப் பிரதேசத்திலும் கணனிக் கல்வி நிலையம் ஒன்றை திறந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ-42)

### மின் வழங்கல் தாமதம்

(நவக்கிரி)

சிறுப்பிட்டி மேற்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதில் தாமதம் காட்டி வருவதாக அப்பகுதி மக்கள மின் சாரசபை மீது அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான முன் ஆயத்தங்கள் சில காலங்களுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் பின்னர் அது இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-233)

### பணிகள் மீண்டும் ஆரம்பம்

(திருநெல்வேலி)

யுத்தம் காரணமாக சேத முற்றிருந்த வடமராட்சி கிழக்கு மருதங்கேணி ப.நோ. கூ. சங்கப் பணிகள் மீண்டும் ஆரம்பமாயின. (க-43)

### பட்டப்பகலில் வீடு மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் உள்ள வீடு ஒன்று பட்டப்பகல் வேளையில் ஆறு பேர் கொண்ட குழுவினரால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

தொலைக்காட்சிப் பெட்டி, டெக் மற்றும் பெறுமதி யான பொருட்கள் என்பன இச் சம்பவத்தின் போது சேதமாக்கப்பட்டன.

பழைய பகைமையேஇச்சம்பவத்திற்கு காரணம் என்று தெரிவிக் கப்படுகிறது. யாழ்.பொலிஸ்நிலையத்திலும் புகார்செய்யப்பட்டுள்ளது. (க-7)

### ஆய்வுகூட உபகரணங்கள் கொள்ளை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூட பூட்டுக்களை உடைத்துக் கொண்டு இரவு வேளைஉட்புகுந்த திருடர்கள் ஆய்வு கூட விஞ்ஞான உபகரணங்களைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி கல்லூரி நிர்வாகம் பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்துள்ளது. (உ-52)

### நுண்ணுயிரியல் நிபுணரின் வருகை

(யாழ்ப்பாணம்)

நுண்ணுயிரியல் நிபுணரும் சிரேஷ்ட விரிவுரையாளராக லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியின் மருத்துவ பீடத்தில் கடமையாற்றுபவருமான கலாநிதி ஜோன்கோல்ட்டன் இன்று திங்கட்கிழமை யாழ். மருத்துவ பீடத்துக்கு வருகைதரவுள்ளார்.

குடல் சம்பந்தமான நோய்களைப் பற்றியும் அவற்றிற்கு காரணமாக இருக்கக்கூடிய பற்றீரியாக்கள் பற்றியதுமான ஆராய்ச்சியில் அவர் தற்சமயம் ஈடுபட்டுள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்துடன் இணைந்து இலங்கையின் மேற்கு மாகாணப்பகுதியில் குடல் சம்பந்தமான நோய்களில் பற்றீரியாக்களின் பங்கு பற்றிய ஆராய்ச்சியை அண்மையில் ஆரம்பித்துள்ள இவர், வட பகுதியில் இது சம்பந்தமான ஆராய்ச்சிகளை யாழ். மருத்தவ பீ. நுண்ணுயிரியல் பகுதியுடன் இணைந்து மேற்கொள்ளக் கூடிய சாத்தியக்கூறுகளைப் பற்றியும் கலந்தாலோசிக்கவுள்ளார்.

குடல் சம்பந்தமான நோய்களை பற்றிய விரிவுரை ஒன்றையும்,யாழ். விஞ்ஞான சங்கத்தின் அனுசரணையுடன் இன்று திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நிகழ்த்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மருத்துவக் கல்விக்கான பாடவிதானம் பற்றிய கருத்தரங்கு ஒன்றையும் மருத்துவ பீட விரிவுரையாளர்களுக்கு வழங்கவுள்ளார். (த)

## இன்று ஒரு தகவல்

# தலைவர் ஆகத் தகுதிகள்

என்னுடைய நண்பர் ஒருவர்... ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். "என்ன யோசனை பண்ணுகின்றீர்கள்" என்று கேட்டேன் "தலைவர் ஆகவேண்டும என்று பார்க்கிறேன். அதுதான் அதற்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்றார். நான் கூட அதுமாதிரி யோசித்துப் பார்த்தேன். அதன் பின்னர் அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டேன். என்று சொன்னேன். "ஏன்?" என்று கேட்டார். அதற்கான தகுதிகள் என்னிடம் இல்லை என்பது என்னைவிட மற்றவர்களுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அதனால் பேசாமல் கம்மென்று இருந்து விட்டேன் என்று சொன்னேன்.

தலைவர் ஆவதற்குத் தகுதிகள் வேறு உண்டா? என்று யதார்த்தமாகவே கேட்டார். நான் உடனே என்னிடமிருந்த ஒருபுத்தகத்தை எடுத்துப் படித்துப் பாருங்கள் என்று சொல்லி அவரிடம் போட்டேன். தலைவர் ஆவதற்கு என்ன வழி என்பதைப் பற்றி அதிலே போட்டிருந்தார்கள். முதல் வழி என்ன தெரியுமா? ஒரு நாலுபேருக்கு முன்னால் - இல்லையென்றால் ஒரு கூட்டத்திற்கு முன்னால் நீங்கள் பேசப் போகிறீர்கள். அப்பொழுது எப்படி ஆரம்பிக்க வேண்டுமென்றால்... உண்மையான புகழ்ச்சி, நேர்மையான பாராட்டு ஆகியவற்றோடு ஆரம்பிக்க வேண்டும். எடுத்தவுடன் அது சரியில்லை... இது சரியில்லை என்று பேசிக்கொண்டிருக்கக்கூடாது.

மக்களைப் பார்த்து நீங்கள்தான்தப்புப் பண்ணிவிட்டீர்கள் என்று நேரடியாகச் சொல்லக் கூடாது. மக்கள் பேரில் தவறு இருந்தாலும் அதை மறைமுகமாக ஏதாவது கதை சொல்லி அதிலிருந்து அவர்கள் புரிந்து கொள்கிற மாதிரிச் செய்ய வேண்டும். மற்றவர்கள் பண்ணிய தப்பு என்ன என்ன என்று அலசுவதற்கு முன்னர் நீங்கள் பண்ணிய தப்பு என்ன என்பதைப்பற்றியே பேசுங்கள். எதற்கும் நேரடியாக உத்தரவு போட்டுக் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். இதை நீங்கள் செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு பதிலாக இதைநீங்கள் இப்படி செய்தால் எப்படி இருக்கும்? என்று கேள்விமாதிரிக் கேட்கவேண்டும்.

இப்படிக்கேட்டால் அது உத்தரவு மாதிரித் தோன்றாது. மற்றவர்களின் மரியாதையைக் காப்பாற்றுவது மாதிரி பேசவேண்டும். உங்கள் பேச்சு இன்னொருவரை அவமானப்படுத்துவது மாதிரி இருக்கக் கூடாது. ஏன்தான் இவரிடம் போய் மாட்டினோம் என்று யாரும் நினைத்து விடக்கூடாது. ஒவ்வொரு சிறு வளர்ச்சியையும் பாராட்டவேண்டும். வெற்றி சாதாரணமாக இருந்தாலும் பாராட்டாமலிருந்து விடக்கூடாது. பாராட்டும்போது தாராளமாக இருங்கள். குறைசொல்லும்போது கவனமாக இருங்கள். வாய்க்கு வந்தபடி பேசிவிட்டால், பின்னர் வகையாக மாட்டிக் கொண்டு விழிக்கவேண்டியிருக்கும்.

நீங்கள் பேசுவது மற்றவருக்கு ஒருகௌரவத்தையும் மரியாதையையும் உண்டுபண்ணுவது மாதிரி இருக்க வேண்டும். நீங்கள் பேசுவது மற்றவர்களுக்கு இருக்கின்ற கொஞ்ச நஞ்ச மரியாதையையும் கெடுப்பதாக இருந்து விடக்கூடாது. உங்கள் பேச்சைக் கேட்டால் கேட்கின்ற வர்களுக்கு ஊக்கம் வரவேண்டும். உற்சாகம் வரவேண்டும். தவறு எதுவாக இருந்தாலும் அதைச் சுலபமாகத் திருத்திக்கொள்ளலாம். சரிபண்ணிக் கொள்ளலாம் என்பது மாதிரி உங்கள் பேச்சு இருக்க வேண்டும். மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துங்கள். உங்கள் யோசனையைக்கேட்டு நடப்பதனால் அந்தச் சந்தோஷம் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும். இந்தத் தகுதிகள் உங்களிடம் இருந்தால் நீங்கள் ஒரு சிறந்த தலைவர் ஆகலாம் என்று இந்தப்புத்தகத்தில போடப்பட்டிருக்கிறது.

இந்தக் காலத்தில் தலைவர் ஆவதற்கு வேறு சில தகுதிகள் தேவைப்படுகின்றன. ஒரு பிள்ளை தன் அப்பாவிடம் போய் அப்பா - உன்னைப் போன்று நானும் அரசியலில் சேர வேண்டும். தலைவர் ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இன்றிலிருந்து எனக்கு அரசியல் பாடம்கற்றுக்கொடு என்றான். அவரும் சரி என்று சொல்லி வீட்டு ஒரு பெரிய ஏணியை எடுத்துக்கொண்டுவந்தார். ஒரு சுவரில் சாத்தினார். மகனைப் பார்த்து இந்த ஏணியில் ஏறிமேலே போய் அங்கு பரணில் இருக்கிற புத்தகத்தை எடுத்துக்கொண்டு வா என்றார்.

அப்பா ஏணி மிகவும் உயரமாக இருக்கிறது. நீ ஜாக்கிரதையாக இதைப் பிடித்துக்கொள் நான் ஏறிப் போகின்றேன் என்றான் பையன். பயப்படாதே நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார் அப்பா. பையன் ஏணியில் ஏறினான். உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்து விட்டார். ஏணி சரிந்துவிட்டது. பையன் பொத்தென்று கீழே விழுந்தான். இடுப்பைப் பிடித்துக் கொண்டு எழுந்தான். என்னப்பா இது... இப்படி என்னை ஏறவிட்டுக் கையை விட்டுவிட்டாய் என்றுகத்தினான். அப்பா நிதானமாகச் சொன்னார் அவசரப்படாதேயப்பா... அரசியலில் இது தான் முதல் பாடம். பெற்ற அப்பனாக இருந்தாலும் அவனை நம்பாதே! என்று உபதேசம் பண்ண ஆரம்பித்தார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல் இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் திட்டமிட்டபடி இன்று நடைபெறமாட்டாது என யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்ததொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாட விருப்பதாலேயே இக் கலந்துரையாடல் பிறிதொருதினத்தில் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## பாடசாலைகள் புனரமைப்பு

(சில்லாலை)

மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம்,பண்டத்தரிப்பு யசிந்தா பாடசாலை, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி,இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றது.

ஜி.ரி. சற் நிறுவனத்தின் அனுசரணையுடன் இப் புனரமைப்பு வேலைகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. (க-58)

19வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டி

## கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் மதூஷன் சாதனை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடந்து முடிந்த 19வயதுப் பிரிவு சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் சந்திரநாதன் மதூஷன் 738ஓட்டங்களைக் குவித்துச் சாதனை படைத்துள்ளார். இவர் தான் விளையாடிய 8போட்டிகளிலேயே இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளார்.

இவற்றில், நான்கு பாடசாலைகளுக்கு எதிராகச் சதங்களையும் குவித்துள்ளார். யாழ்.மத்திய கல்லூரிக்கு எதிராக கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஒரு ஓவரில் ஆறுபந்துகளிலும் ஆறு சிக்ஸர்கள் அடித்து 63பந்துகளில் 127ஓட்டங்களைக் குவித்து மகத்தான சாதனை படைத்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் இவ்வாண்டு நடைபெற்ற 19வயதுப் பிரிவுக் கிரிக்கெட் போட்டியில் விளையாடிய மாணவன் செல்வன் மதூஷன் யாழ்ப்பாணக் கல்லூரியுடன் 157ஓட்டங்களையும், யாழ். மத்தியகல்லூரியுடன் 127ஓட்டங்களையும், யூனியன் கல்லூரியுடன் 122 ஓட்டங்களையும், யாழ். இந்துக் கல்லூரியுடன் 110 ஓட்டங்களையும் யாழ். பரியோவான் கல்லூரியுடன் 89ஓட்டங்களையும். மானிப்பாய் இந்துக்கல்லூரியுடன் 65ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்டப் பாடசாலைத் தெரிவு அணிகளில் தேர்வு செய்யப்பட்டு தம்புள்ளையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டப் பாடசாலைகளின் தெரிவு அணிகளுக்கு எதிராகவும் சிறப்பாக இவர் விளையாடியுள்ளார். கிரிக்கெட் போட்டியில் பல்வேறு சாதனை களைப் படைத்து வரும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு செல்வன் மதூஷன் மேலும் பெருமை சேர்த்துள்ளார்.

இவரைக் கல்லூரிச் சமூகம் பாராட்டியுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவரான செல்வன் மதூஷன், யாழ். நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர் திரு.பொ.சந்திரநாதன், கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி ரதி சந்திரநாதன் தம்பதிகளின் புதல்வராவார். (ந)

# சமாதானத்தைக் குழப்பும் சக்திகளின் மறைமுக வேலையா?

## பேர்னாட் அடிகள் பிரதமருக்கு கடிதம்

(தென்மராட்சி)

சர்வதேச கடற்பரப்பில் வந்து கொண்டிருந்த புலிகளின் கப்பலைத் தாக்கி அழிக்கும் படியான பொறுப்பற்ற உத்தரவை தென்பகுதியில் இருக்கும் சமாதானத்தைக் குழப்பும் சில சக்திகளே வழங்கியிருக்க வேண்டும் என யாழ்ப்பாணத்திலுள்ள நீதிக்கும் சமாதானத்துக் குமான ஆணைக்குழுவின் தலைவ ரான வண. பிதா ஏ.ஜ.பேர்னாட் அடிகள் பிரதமர் ரணிலுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்துல் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த மாதம் மானிப்பாயில் இடம் பெற்ற ஆத்திரமூட்டுகின்ற வகையிலான மகளிர்மீது மேற்கொண்ட தாக்கு தலையடுத்தும் தமீழீழ விடு தலைப் புலிகள் பொறுமை காத்துள் ளனர். அதேபோல நெடுந்தீவில் இடம்பெற்ற சம்பவத்தின் போதும் பொறுமையைப் புலிகள் பேணியுள்ளனர்.

பாதுகாப்புப் படையினரும், சம்பந்தப்பட்ட அரசியல் அதிகாரத் தரத்தினரும் தமதுகடந்த கால அனுபவங்களில் இருந்து பாடங்களைப் படிப்பது இல்லைப் போலவே தெரிகின்றது. சர்வதேச கடற்பரப்பில்தமிழீழ விடுதலை புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை குறித்து ஒன்றுக்குப் பின் முரணான அறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எனவே, எதிர்காலத்தில் இத்தகைய ஆத்திரமூட்டுகின்ற சம்பவங்கள் இடம்பெறா வண்ணம் பாதுகாப் புப் படையினர் செயற்பட தாங்கள் உரிய உத்தரவுகளை வழங்குவீர்கள் என எதிர்பார்க்கிறோம் என்று அக்கடிதத்தில குறிப்பிட்டுள்ளார். (க.77)

## இராசி பலன்

**17.03.2003**

(பங்குனி 3, திங்கள்)

சதுர்த்தசி மா.6.58வரை
புரம் வை.5.14வரை
இராகுகாலம் 7.50 - 9.20
சுபநேரம் 12.20 - 1.50
முதலாம பங்குனித்திங்கள

**மேடம்**
வியாபாரமேன்மை, காரிய இடையூறு, பிறருக்கு உதவி செய்தல், உஷ்ணரோகம்.

**இடபம்**
கல்வியில் ஆர்வம், அற்பர்நேசம், எதிர்பாராத நன்மை, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, இனியசம்பவம், பணவரவு.

**கடகம்**
வேலைக்கஷ்டம், எதிர்பாராத மனஸ்தாபம், காரிய சிந்தை, புதியதிருப்பம்.

**சிங்கம்**
ஆழ்ந்த சிந்தை, நல்லமுயற்சி, தெய்வசிந்தை, ஜனவசியம்.

**கன்னி**
காரியஅலைச்சல், திடீர்நன்மை, சுபசெலவு, நித்திரைக் குறைவு.

**துலாம்**
நினைத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, சகோதரர் உதவி, தனலாபம்.

**விருச்சிகம்**
தூரதேசச்செய்தி, முயற்சி கைகூடும், அதிகாரம், உறவினர் சந்திப்பு.

**தனுசு**
ஆன்றோர் மதிப்பு, அச்சமானநிலை, புதிய திட்டமிடல், முயற்சி தாமதம்.

**மகரம்**
காரியதடங்கல், பிரயாணப்பயம், உறவினர் வெறுப்பு, போசனசுகம்.

**கும்பம்**
தனவரவு, நல்லவரவேற்பு, சயனசுகம், பிரயாணம்.

**மீனம்**
புதிய முயற்சி, நோய்குணமடைதல், பகைவர் நேசம், கற்பனை மிகுதி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## புதிய தொழில்நுட்பக் கல்லூரி மன்னாரில் அமைக்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் புதிய தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், மன்னார் மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு, மூன்றாம் நிலைக் கல்விப் பயிற்சி அமைச்சின் செயலாளரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையினை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, மூன்றாம் நிலைக் கல்விப் பயிற்சி அமைச்சின் செயலாளர், தொழிற்கல்விப் பயிற்சி அதிகாரசபைத் தலைவருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(க-8)

புத்தளப் பகுதியில்

## மீனவர் குழுக்கள் மோதல் முடிவிற்கு வந்தது

(புத்தளம்)

கற்பிட்டி பத்தளாங்குன்றுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரு மீனவக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசோகரத்னவீர தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அன்று சிறு அளவிலான மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும பாரிய அளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குமிடையே கடலில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாகவே கற்பிட்டி பத்தளாங் குன்றுப்பிரதேசத்தில் இரு மீனவக் குழுக்கள் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

இதே வேளை, புத்தளம் பாலாவிப் பிரதேசத்தில் இனம் தெரியாத ஆயுதக்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்ததுள்ளார். படுகாயமடைந்த மீனவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிக்சை பெற்றுவருகிறார்.

இச்சம்பவம் மீனவர்களிடையே ஏற்பட்ட மோதல்களின் எதிரொலியாக இருக்கலாம் எனவும பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளர். (க-8)

ஒல்லும் கருமம் உடற்றுபவர் கண்மை
சொல்லாடார் சோர விடல்
-குறள்-

## வலம்புரி

### சமயோசித முடிபு !

விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம்,சமாதானப் பேச்சுக்களை ஸ்தம்பிக்கச் செய்து விடும் என்ற ஊகங்கள் பரவலாக அடிபட்ட போது அதற்கு முடிபு கட்டி யப்பானில் நடைபெறும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள பங்கு பற்றுவது என்ற தீர்மானம் காலம் உணர்ந்து எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும்.

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவமும்,11போராளிகள் உயிரிழந்த சோகமும் ஆறாம் சுற்றுப் பேச்சுக்களை பகிஷ்கரிக்க வேண்டும்என்ற கருத்தை புலிகள் தரப்பில் பரவலாக ஏற்படுத்தியிருந்தது.

இக் கருத்து ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தினாலும் வெளிப்படையாகக் கூறப்பட்டது.விடுதலைப் புலகள் யப்பானில் நடை பெறவுள்ள 6ம் சுற்றுப் பேச்சுக்களை பகிஷ்கரிக்கப் போகின்றனர்.என்ற செய்திஅடிபடத் தொடங்கியதும்,சமாதானத்தின்பால் நம்பிக்கை கொடிருந்தவர்களின் குருதி அப்படியே உறைந்து போய் விட்டது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளாவிட்டால், மீண்டும் யுத்தம்-வெடிகுண்டுச் சத்தம் இதனை இன்னுமொரு தடவை ஜீரணிக்கக் கூடிய வலிமை எம்மிடம் உண்டா? என்ற கேள்வியும்கூடவே பொது மக்களிடம் எழுந்தது.பொது மக்களிடம் எழக்கூடிய மேற்படி கேள்விகள் நியாயமானவை. அதற்குப் பின்னால் காரணங்களும் உண்டு.

இந் நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது முடிவை அறிவிக்கினறார்.பேச்சுக்களைப் பகிஷ்கரித்து எமது ஆட்சேபனையைத் தொிவிப்பதிலும் பார்க்க பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு அரச தரப்பிடம் எமது அதிருப்தியைத் தெரிவிப்பதே புத்திசாலித்தனம். எனவே யப்பானில் நடை பெறும் சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றுவர்.

தலைவர் பிரபாகரனின் முடிபு-அறிவிப்பு அனைவரையும் திகைக்க வைக்கிறது. கப்பலை- போராளிகளை இழந்த புலிகள் இனிமேல் பேச்சுவார்த்தை மேசைக்கு போக மாட்டார்கள் எனப் பேருவகையில் திழைத்திருந்த பேரினவாதிகளுக்கு தலைவர் பிரபாகரனின் முடிபு நிச்சயமாக அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பது உறுதி. ஓர் இனத்தின் தலைவன் தனது இனம் சார்பான முடிவையே எச்சந்தர்ப்பத்திலும் எடுக்க வேணடும. தன்னலமோ அன்றி ஓர் குழுமத்தின் நலனோ அல்லது ஓர் அமைப்பின் நலனோ பாராது தான் சார்ந்த இனத்தின் நலனை, இனம் சார்ந்த தேசத்தின் நலனை மையமாகக் கொண்டே பொதுவான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இதற்கு அமைவாக புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பேச்சுக்களில் கலந்து கொள்வதென்ற முடிவை எடுத்துள்ளார்.

# உடத்தலவின்ன படுகொலை வழக்கு
# சாட்சியின்குறிப்புப்புத்தகத்தை பொறுப்பேற்க டி.ஐ.ஜிக்கு உத்தரவு

(கோட்டை)

உடத்தலவின்ன படுகொலை வழக்கில் சாட்சியான பொலிஸ் அதிகாரி ஒருவரிடமுள்ள குறிப்புப் புத்தகத்தை பொலிஸ் பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்படி கண்டி பிரதி பொலிஸ்மா அதிபருக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தக் குறிப்புப் புத்தகம் சாட்சியான பொலிஸ் அதிகாரியின் வீட்டில வைக்கப்படுவதால் சாட்சி வீட்டுக்குத் திரும்பும் முன்னரே காணாமல் போய் விடலாம் என்றும் அதனால் அக் குறிப்புப் புத்தகத்தை நீதிமன்றம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் சொலிஸிஸ்ர் ஜெனரல் சமர்ப்பித்த கோரிக்கை ஒன்றை அடுத்து நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது இரண்டாவது எதிரியான லோஹான்ரத்வத்த சம்பந்தப்பட்டிருந்த தேர்தல் மோசடிகள் பற்றிய குறிப்புகள் அந்தக் குறிப்புப் புத்தகத்தில் இருப்பதாகத் தெரிவித்ததையடுத்து அக்குறிப்புப் புத்தகம் தொடர்பான பிரச்சினை சொலிசிஸ்டர் ஜெனரலினால் நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

மேல்நீதிமன்ற நீதிபதிகள் எரிக் பஸ்நாயக்க,(தலைவர்)தீப்பலி விஜய சுந்தர, சுனில் ராஜபக்ஷ ஆகியவர்களைக் கொண்ட ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தின் முன் இவ்விசாரணைகள் நடைபெற்றன.

நில்மாணி குணரட்னாவென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் வெள்ளிக்கிழமை சாட்சியமளித்தார். புதன் கிழமை சாட்சியமளித்த நபர் ஒருவர் பொய்ச்சாட்சியம் சொன்னமைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, லோஹான் ரத்வத்த, சானுக் கரத்வத்த, ரஞ்சித் பண்டாதர்மசிறி, எஸ்.கி.டி சில்வா, கமாப் விஜயரட்ண, அருனாகுமார, டி.எம். திஸ்ஸநாயக்க, என்.ரோஹண, கிருஷ்ணா இந்திக்கா, நிமால்திஸ்ஸநாயக்க,ஷாவுன்வனிக சேகர, நாளின் ரட்கம, கிங்ஸ்லி வித்தாரன ஆகியவர்கள் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

காயமடைந்தவர்களை உடத்தலவின்ன முஸ்லிம் பாடசாலையிலிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதில் தாம் ஈடுபட்டிருந்ததாக சாட்சி கூறினார். பின்னர் தாம் திரும்பி வந்து சார்ஜன்ட் உபாலியை சந்தித்ததாகவும் இராணுவ உடையில் வந்த சிலர் வாக்குப்பெட்டிகள் சிலவற்றை அபகரித்து சென்று விட்டதாகவும் சார்ஜன்ட் கூறியதாகவும் சாட்சி கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

பொதுத் தேர்தல் அன்று நாங்கள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தோம். ஓர் இடத்தில் டி-5 வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அங்கிருந்தவர்கள் இராணுவ உடை தரித்திருந்தனர். எங்கள் கடமைகளைச் செய்ய அவர்கள் அனுமதிக்கவில்லை. நான் வாகனத்திலிருந்து இறங்கி அவர்களுடன் பேசினேன். எனது அலுவலர் இலக்கத்தை அவர்கள் பதிந்து கொண்டனர். அவர்கள் பொலிஸ் அலுவலர்களா என்று கேட்டேன். ஆம் என்றார்கள். அவர்களின் பொலிஸ் அடையாள அட்டையைக் கேட்டேன். அவர்கள் தரவில்லை. அங்கு 30 பேர் வரையில் இராணுவ உடையில் இருந்தனர். அவர்களில் ஒருவர் சிவில் உடையில் இருந்தார். அவர் தான் லோகான் ரத்வத்த(2ஆவது எதிரியை சாட்சி அடையாளம் காட்டினார்) கடமையை நாங்கள் செய்ய வேண்டியிருப்பதாகவும் கும்பலை அழைத்துச் செல்லும் படியும் அவரிடம் கூறினேன். குருமார்கள் தங்கள் மீது கல்வீசியதாகவும் தங்களால் நகர முடியாமல் இருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

பொலிஸில் புகார் கொடுக்கும் படி கூறினேன். பிறகு அவர்கள் போய் விட்டார்கள். வீதியில் ஒரு பஸ் நின்றது. அதில் இரு ஆண்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். வாக்களிப்புக்கு ஆட்களைக் கொண்டு செல்வதில் அப்பஸ் ஈடுபட்டிருந்தது. பஸ்ஸின் திறப்பை கும்பல் திருடிவிட்டதாகச் சொன்னார்கள்.

பின்னர் மூன்று வாகனங்களில் இராணுவ உடையில் ஒரு கோஷ்டி வந்தது. லோகான் ரத்வத்த ஜீப்பில் இருந்து இறங்கி நீர் ஒதுங்கி போய் விடும் காலையில் நடந்தது போல் இனி வாக்களிப்பு நடக்காது என்று கூறினார்.

அப்பொழுது நேரம் 12.30 மணி. மக்களுக்கு வாக்களிக்க உரிமையுண்டு என்று நான் கூறினேன். உன்னை நாங்கள் கவனித்துக் கொள்வோம் என்று லோகான் என்னிடம் கூறினார். பின்னர் அவர்கள் சென்று விட்டார்கள்.

இதன் பின் எதிரிதரப்பினால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். இச்சமயத்தில் சாட்சி தமது குறிப்புப் புத்தகம் பற்றி குறிப்பிட்டார். அப்புத்தகம் வீட்டில் இருப்பதாகவும் சொன்னார்.

இக்கட்டத்தில் பிரதி சொலிசிஸடர் ஜெனரல் குறுக்கிட்டு அந்தக் குறிப்புப் புத்தகம் நீதிமன்றப் பொறுப்பில் எடுக்கப்பட வேண்டும் என்றும் இல்லையெனில் அது திருடப்பட்டு விடும் என்றும் சொன்னார்.

மார்ச் 17ஆம் திகதி விசாரணை ஒத்திப் போடப்பட்டது. (பி)

# அத்துலத் முதலி கொலை வழக்கில்
# —எதிரிகள் நால்வரும் விடுதலை—

(கோட்டை)

இலங்கை விமானப்படையின் தளபதியாக எயர் கொமடோர் ஜே.எல். சி.சல்காடோ நியமிக்கப்பட்டுள்ளார்.

எயார் வைஸ் மார்ஷல் தரத்துக்கு அவர் தரம் உயர்த்தப்பட்டு விமானப்படையின் தளகர்த்தராக ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுலாகும் விதத்தில் நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கை விமானப்படையில் 1972இல் சேர்ந்த அவர் விமானம் ஓட்டுநர் பயிற்சியாளராக தகுதி பெற்று பல பொறுப்பான பதவிகளில் நியமனம் பெற்றிருந்தார்.

*விமானப்படை புதிய தளபதி*

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 4 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் முன்னாள் யுஎன்பி மாகாண சபை அமைச்சர் யு.எல். செனவிரட்ண, டபிள்யு.பி. சோமரட்ண, இன்ஸ்பெக்டர் பி.எல்.ஜி தேவசுந்தர காஜன்ட் , என்.ஏ.அட்தீன் ஆகியவர்கள் மீது கொழும்பு மஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் திரு அத்துலத் முதலியைக் கொலை செய்ய சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு போதிய ஆதாரம் இல்லாமையால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

பிரதிவாதிகள் தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றம் நடந்த இடத்தில் பிரசன்னமாக இருக்கவில்லையென்றும் குறித்த நேரத்தில் இந்த அதிகாரிகள் குண்டு வெடிப்பு வழக்கொன்று தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்குப் போயிருந்தார்கள் என்பதற்கு போதிய சாட்சியம் இருக்கிறது என்றும் வாதிட்டார்.

அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், இந்த வழக்கில் மேற்கொண்டும் சமர்ப்பிப்பதற்கு சாட்சியங்கள் இல்லையென்றும்,வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆதாரங்கள் போதாதென்றும் நீதிமன்றம் கருதுமிடத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நீதிமன்றம் விடுதலை செய்வதற்கு தாம் ஆட்சேபிக்கவில்லையென்று குறிப்பிட்டார்.

போதிய ஆதாரம் இல்லாமையால் எதிரிகளைத் தாம் விடுவிப்பதாக மேலதிக நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய அறிவித்து எதிரிகளை விடுவிக்குமாறும் உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் டி.பி குமரசிங்க(பி.சி)ஆஜராகியிருந்தார். அரச தரப்பில் அச்சலா வெங்கப்புலி ஆஜராகியிருந்தார். (பி)




**இலங்கைக்கு வழங்கப்படவிருக்கும் அமெரிக்கக் கப்பல். அமெரிக்கக் கரையோரக் காவல் கப்பலான யு.எஸ்.சி.ஜி.எஸ்- கரேஜியஸ் என்ற கப்பலை வாங்குவதற்கு இலங்கை அரசு அமெரிக்க அரசுடன் சமீப காலமாக பேச்சுவார்த்தை நடத்தி வந்துள்ளது. அமெரிக்கக் காங்கிரஸ் சபை அங்கீகாரம் கிடைத்ததும். இது இலங்கைக்கு வழங்கப்படும் 1லட்சத்து 50 ஆயிரம் யு.எஸ் டொலர் பெறுமதியான இக்கப்பல் ஹெலிகொப்ரர்கள் சுமந்து செல்லும் வசதிபடைத்தது. இதற்கு முன் இவ்வாறான ஒரு கப்பலை இலங்கை இந்தியாவிடம் வாங்கியிருந்தது.**

## திசைரி தியானம்

### செய்ய வேண்டியவை

உண்மை என்னும் குன்றின் மேல் உறுதியாக நில். சுயம்பிரகாசமும், அமரத்துவமும், யதார்த்தமுமாயுள்ள ஆத்மாவை உறுதியாகப் பற்றிக் கொள்.

ஒவ்வொரு தினமும் எவ்வளவு நற்செயல்களைச் செய்ய முடியுமோ, அவ்வளவு செய், ஹரி ஓம், ஸ்ரீராம அல்லது உன்னுடைய இஷ்ட மந்திரம் இவற்றை மனதிலோ அல்லது மௌனமாகவோ ஜபி. உயர்ந்த நல்லெண்ணத்துடன் இயற்கையான எளிமையான வாழ்க்கையை நடத்து. நற்குணங்களைப் பயில்வாய். ஆத்மாவை அறிந்து என்றும் சுதந்திரமாய் இருக்கலாம்.

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை

"அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை, நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை"

உலகில் அன்பு தான் தலை சிறந்த மானிடப் பண்பு. அந்த அன்பை நம்மை அன்பு செய்பவர்களுக்கு மட்டுமே நாம் 'கொடுக்கிறோம். அதனால் என்ன பயன்? இன்றைய சமுதாயத்தில் ஒருவராலும் அன்பு செய்யப்படாத அனாதைகள், கைவிடப்பட்டோர், சாதியின் பெயரால் ஒதுக்கப்பட்டோர், ஏழைகள், விதவைகள் என எத்தனையோ பேர் உள்ளனர். அவர்களுக்குத் தான் நம் அன்பும், உறவும் சென்று சேர வேண்டும். இப்படிப்பட்டவர்களை பணக்கார வர்க்கம் பகைவர்களாகக் கருதி வருகின்றனர். செல்வந்தர் செல்வந்தருக்கே உதவி செய்தால் என்ன பயன்? அதனால் அவர்கள் கைவிடப்பட்ட மக்களோடு உறவு கொண்டு பகிர்ந்து சமநிலையை உருவாக்க வேண்டும். அப்போது தான் அன்பு அர்த்தம் பெறுகின்றது. பாமரர்களுக்கு பகிர்ந்து கொடுத்துள்ளோம். ஏழைகளின் ஏக்கங்களை உணர்ந்துள்ளோமா என நம்மை நாமே கேட்போம்.

**காவலன்**

## நிறைவேற்று...

நெடுந்தீவுப் படகு விவகாரத்தில் படகை கைப்பற்றுமாறு கடற்படைக்கு உத்தரவிட்டவர் ஜனாதிபதியே. அதேபோல் சர்வதேச கடற் பரப்பில் புலிகளின் கப்பல் அழிக்கப் பட்டமைக்கு கடற்படையினர் பின்னணியில் இனங் காட்டிக் கொள்ளாத சக்தி ஒன்று இயங்கி வருகிறது.

விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் 20 பேர்கள் அடங்கிய அரசியல் விவகாரக் குழுவென்று இம்மாத இறுதியில் சில நாடுகளுக்கு செல்லவுள்ளது. அவர்கள் சமூக பொருளாதார விவகாரங்களுக்கு ஏற்ற சமஷ்டி முறை ஒன்றை பின்பற்றி முடிவு செய்வர். சமஷ்டித் தீர்வு ஒன்றிற்கு குறிப்பிட்ட பிரதேசம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதனை நாம் தமிழ்பேசும் மக்கள் தாயகம் என்போம். இதனை சிங்கள மக்கள் ஏற்கவில்லையாயின் பேச்சுக்கள் மூலமான சமாதானத் தீர்வு சாத்தியமில்லை. எனவே இது சிங்கள மக்களைப் பொறுத்த விடயமாகும் என்றும் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (வ-5)

## சோதனை நடவடிக்கைகள் தீவிரம்

(கொழும்பு)

வவுனியா மற்றும் கொழும்புப் பகுதிகளில் உள்ள சோதனை நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருவதுடன் கொழும்பு நகரில் திடீர் சோதனைகளிலும் பொலிஸார் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது. (க-10)

## புலிகளின்...

ஜோய் மகேஸ்வரன், புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், திருமதி அடேல் பாலசிங்கம் உட்பட ஒன்பது பேர் இடம் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலிருந்து நேற்று முற்பகல் 11மணிக்கு இலங்கை விமானப்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு சென்ற இப் பிரதிநிதிகள் குழுவினை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பொட்டு அம்மான், மூத்த தளபதி கேணல் பானு, திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, தளபதி வீமன், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி உட்பட தளபதிகள் மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

வன்னியில் இருந்து கொழும்பு சென்ற புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவினர் நோர்வேத் தூதரகத்தில் தங்கியிருந்து நேற்றிரவு 9.00மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். (வ)


# YOGI BEAUTY PARLOUR

## LADIES HERBAL BEAUTY CARE & FITNESS CENTRE

யாழ்.நகரில் முதன் முறையாக பெண்களுக்காக எமது அழகு நிலையம் யந்திர சாதனங்கள் மூலமாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நவீன உடற்பயிற்சி சாதனங்கள் மூலமாக பெண்கள் கட்டான உடலமைப்பைப் பெறுவதற்காக பெண்களுக்கான ஜிம் (GYM) பயிற்சி வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

- முகப்பரு சிகிச்சை
- பொடுகு சிகிச்சை
- முடி உதிர்தலுக்கான சிகிச்சை

(High Frequency Treatment)

- Hair Rebonding
- Hair Preming
- Hair Colouring
- Gold facial

Super Sonic Treatment


## மாணவருக்கான திரைப்படங்கள்

(நெல்லியடி)

யாழ்.மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நெல்லியடி மகாத்மா திரையரங்கில் மாணவர்களுக்கான திரைப்படக் காட்சி காண்பிக்கப் படவுள்ளது.

தென்னாபிரிக்க திரைப்படமான The Power of One (ஒருவரின் பலம்), ஈரானியத் திரைப்படமான Hil Drew of Hevean (தெய்வீகக் குழந்தைகள்), தென்னிந்தியத் திரைப்படமாக குட்டி ஆகிய திரைப்படங்கள் காண்பிக்கப் படவுள்ளன. (க-44)

## பிறமொழி...

பெற்றவர்கள் கூட மொழிக் குறைபாட்டோடு எழுதுவதை நாம் காண்கின்றோம். இது மொழியைக் கற்கின்ற குறைபாடாகவே உள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார். (வ)

## பொ.ஐ.முன்னணியை...

அதிகரித்துள்ளது. இதிலிருந்து மக்களைக் காப்பாற்ற பொது ஜன ஐக்கிய முன்னணி இப்போது விழிப்போடு செயல்பட ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாகவே நாம் எமது கூட்டுக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இதன் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணியை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதே எமது நோக்கமாகும் என்றும் கூறினார். (வ)

## அதிகாரப்...

நடந்து முடிந்த 5சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் பார்க்க இப் பேச்சுவார்த்தை வித்தியாசமானதாக இருக்கும்.

அரசியல் தொடர்பான முக்கிய அம்சங்கள் இப் பேச்சுவார்த்தையின் போது விரிவாக ஆராயப்படவுள்ளது. மனிதவுரிமை விடயங்கள், சமஷ்டி அமைப்பு முறையிலான அரசியல் தீர்வுக்குரிய அதிகாரப் பரவலாக்கல் மற்றும் அரசியல் விவகாரங்களும் இப் பேச்சுவார்த்தையில் விரிவாக ஆராயப்படும் என்றும் கூறினார்.

அரசின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதான செயலகப் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக ஆகியோர் ஏற்கனவே யப்பானுக்கு புறப் பட்டு சென்றுள்ளனர். இதேவேளை

# திரைக்கதை உருவாக்கல் பயிற்சி நாளை ஆரம்பம்

## வடக்கிலிருந்து பத்து எழுத்தாளர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக புறநிலை படிப்புக்கள் அலகும் ஸ்கிப்றநெற்றும் இணைந்து நடத்தும் திரைக்கதை உருவாக்கலுக்கு பயிற்சி முகாமின் மூன்றாம் சுற்றுக்கு வடக்கில் இருந்து பத்து எழுத்தாளர் களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான மூன்றாம் சுற்றுப் பயிற்சியின் முதற் பாகம் நாளை தொடக்கம் எதிர்வரும் 21ம் திகதி வரை யாழ் பல்கலைக்கழக சிற்றி மண்டபத்திலும் நிறைவுப் பாகம் எதிர்வரும் 24ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை கொழும்பிலுள்ள இலங்கை ஊடகப் பயிற்சி நிறுவனத்திலும் நடைபெறவுள்ளது.

இம் மூன்றாம் சுற்றுப் பயிற்சிக்கு பின்வரும் திரைக் கதைகள் தெரிவுசெய்யப் பட்டுள்ளன;

பயணம் (அமரதாஸ், கிளிநொச்சி), முறிந்த விழுதுகள்(பாஸ்கரன்,பருத்தித்துறை), செருப்பு (கௌதமன், மானிப்பாய்), குற்றம் புரியாமலே (யமுனாராணி,அச்சுவேலி), போரும் மனிதரும்(கேசவராஜன், முள்ளியவளை), ஒரு பயணத்தின் துகழ் (பவுளஸ்,மன்னார்), புதுவீடு(பிரேமினி,சாவகச்சேரி), மூக்குப்பேணி(ராகவன்,கரவெட்டி), நேற்றைய சுவடு(சாரங்கா, சாவகச்சேரி), வேகம் (சாந்தன், சுதுமலை) (ந-5)

## கலை விழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினால் எதிர் வரும் 20ம் திகதி தொடக்கம் 24ம் திகதி வரை திருகோணமலையில் நடத்தப்படவிருந்த இசை, நாடக,நடன விழா பிற்போடப்பட்டுள்ளது.

விழா நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படுமென கலை பண்பாட்டுக் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஆய்வுப் பட்டறை

(திருநெல்வேலி)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழீழ மாணவர்அமைப்பின் ஏற்பாட்டில் நாளை கணனி தொடர்பான ஆய்வுப் பட்டறை நடை பெறவுள்ளது.

இப் பட்டறையில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக தமிழீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-43)

## மரம் விழுந்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மரம் முறிந்து விழுந்ததில் இளம் பெண் ஒருவர் படுகாயம் அடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தின் போது அல்லைப்பிட்டி 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிங்கராசா யோகேஸ்வரி (வயது 28) என்பவரே படுகாயம் அடைந்தவராவார். (ந-7)

## பாடசாலை உபகரணத் தொகுதி வழங்குதல்

யாழ்ப்பாணம்)

யூனிசெவ் திட்டத்தின் கீழ் யாழ். வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பாடசாலை உபகரணத் தொகுதியை பெறத் தவறியவர்களுக்கான உபகரணத் தொகுதிகள் எதிர்வரும் 21ம் திகதி வெள்ளிக் கிழமை யாழ்.வலய களஞ்சியப் பொறுப்பாளரினால் விநியோகிக்கப் படவுள்ளன. (உ)


பருத்தித்துறை~வியாபாரிமூலை பழவத்தை

அருள் மிகு ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான

தேர்த் திருவிழா சிறப்பிதழ்

திருவருள் பொழியும்

என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்

- முகப்பரு சிகிச்சை
- பொடுகு சிகிச்சை
- முடி உதிர்தலுக்கான சிகிச்சை } (High Frequency Treatment)
- Gold facial
- Pearl Facial } Super Sonic Treatment
- கரும்புள்ளிகள் அகற்றுதல் (With Spot Remover)
- Hair Rebonding
- Hair Preming
- Hair Colouring

உங்கள் எண்ணத்தில் எங்கள் கைவண்ணம்
சகல மங்கள வைபவங்களுக்கும் ஏற்ற ஒப்பனை
அலங்காரங்களை வித்தியாசமாகவும் அழகாகவும்
திருப்தியாகவும் செய்து கொள்வதற்கு
எம்மை நாடுங்கள்

நீங்களும் அழகுக் கலை நிபுணர்களாக விரும்புகிறீர்களா?
எமது அழகு நிலையத்தில் தற்பொழுது
அழகுக் கலை Diploma பயிற்சி வகுப்புக்களும்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்
தருகிறோம்.

தொடர்புகளுக்கு:- MRS.YOGINI SHANMUGANATHAN
Dip in.cosmetology,Beauty Therapy,Hair Dressing
&Home Science(India.Co.Sri Lanka)
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) T.Phone-2222796

(6821)

விரிவாக ஆராயப்படும் என்றும் கூறினார்.

அரசின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அமைச்சர் மிலிந்த மொறகொட, சமாதான செயலகப் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக ஆகியோர் ஏற்கனவே யப்பானுக்கு புறப்பட்டு சென்றுள்ளனர். இதேவேளை அமைச்சர் ராவூப் ஹக்கீம் நேற்றிரவு யப்பானுக்கு புறப்பட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க முல்லைத்தீவு கடற்பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆராயும்போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விசாரணை அறிக்கையில் உள்ள விடயங்கள் கவனிக்கப் படவுள்ளதாகவும், உயர் பாதுகாப்பு வலயம் குறித்த நம்பியாரின் அறிக்கை, மீள்குடியேற்றம் என்பன தொடர்பாகவும் அப் பேச்சுவார்த்தையில் பரிசீலிக்கப்படும் எனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-43)

பொறுப்பாளரினால் விநியோகிக்கப் படவுள்ளன. (உ)

ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்
வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

- அரசியல் கட்டுரைகள்
- அறிவியல் ஆக்கங்கள்
- கவிதைக் கலசம்
- வியாசரின் பதில்கள்
- மகளிர் உலகம்
- சிறுவர் அரங்கம்

இன்னும்
தமிழுலகின் தலைசிறந்த எழுத்தாளர்
செங்கை ஆழியான் எழுதும்
ஈழராஜா எல்லாளன்
தொடர்கதை
வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

## பருத்தித்துறை–வியாபாரிமூலை பழவத்தை அருள் மிகு ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான தேர்த் திருவிழா சிறப்பிதழ்



### திருவருள் பொழியும் ஸ்ரீகாளி தாயே! சித்திரத் தேரேறி வருக! வருக!

பருத்தியெம்பதி வியாபாரிமூலை பழவத்தையில்
பன்னெடுங்காலம் கிழுவை மரநிழலிலமர்ந்து
திருவருள் புரியும் ஸ்ரீ காளியம்மாவே
சீர்மிகு கலை வளம் நிறைந்த சித்திரத் தேரறிவருக!

ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த தாயே!
நோற்றார் மனத்தில் நினைத்ததை எல்லாம்
நொடியில் அளிப்பவள் நீயே!

கூற்றாம் வறுமையைக் கொன்று செல்வத்தைக்
கொளிக்கச் செய்திடும் குயிலே!
மாற்றார் மனத்தின் மயக்கத்தை அறுத்து
மாற்றம் கொடுத்திடும் மயிலே தேரேறிவருக!

தார்மேவு மார்பன் சங்கரன் உடலில்
செம்பாதி தரித்த ஒளியே!
பார்மேவு இமயப் பனிமேவு மலையில்
பாங்காய் வளர்ந்த கிளியே!
நீர்மேவு நெடுங்கடலில் நீள்துயில் கொண்ட
நெடுமால் உடன் பிறந்த பின்னோய்
சீர்மேவு தலங்கள் ஆறில் நின்றருளும்
செல்வக்குமரன் அன்னோய் சித்திரத் தேரேறி வருக!

பங்கயத்தாள் நோக பகலிரவாய் நின்று
பரவுவோர்க்கு நல்லருள் புரிவாய்
மங்கையர் உனை வேண்ட பொங்கிடும் பொலிவுடன்
மனையெல்லாம் சிறப்புற என்றும்
சிங்கத்தின் மீதமர்ந்து தெரு வலம் நீ வந்து
தீமைகள் அனைத்தையும் கொய்வாய்
சங்குகள் எறிகின்ற பருத்திக் கடலருகமர்ந்து
சங்கடம் தீர்க்கின்ற தாயே சித்திரத் தேரேறி வருக!

-சுபமங்களம்-

கவிமாமணி, மதுரகவி, காரை. எம். பி. அருளானந்தன் B.A.(Hons)

அருள் ஆசி வேண்டி பிரார்த்திக்கும்
யோகாஸ் கிறீம் ஹவுஸ
(C/5851) மந்திகை புலோலி

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.